REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Founded 19 Feb 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு PATHUKAVALAN

மலர் 124
இதழ் 21
15 பங்குனி 2000
விலை ரூபா 5

UNIVERSITY LIBRARY JAFFNA 27 MAR 2000 PERIODICALS DIVISION

# 26 பங்குகள் ! 100 ஊக்குவிப்பாளர்கள் !! 3500 சிறுவர்கள் !!!

# யாழ் மறைமாவட்ட திருப்பாலத்துவ சிறுவர்களின் யூபிலி எழுச்சி நாள்

## கிறிஸ்துவின் மறைபரப்பு திருத்தூதர்களே திருப்பாலத்துவ சபை சிறுவர்கள் - யாழ் ஆயர்

கடந்த 5-3-2000 ஞாயிறு யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற யாழ் மறைமாவட்ட திருப்பாலர் சிறுவர்களின் யூபிலி எழுச்சி - நாள் நிகழ்விலே பங்குபற்றி உரையாற்றிய போதே யாழ் ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அவர் விபரிக்கையில் "இந்த யூபிலி ஆண்டிலே நற்கருணையிலே எமது வாழ்வை மையப்படுத்தவும், சிந்திக்கவும் அழைப்பு பெறுகின்றோம். இன்னும் விசேடமாக எதிர்கால திருச்சபையின் முக்கிய அங்கமாக திகழவுள்ள சிறுவர்களாகிய நீங்கள் சிறுவயது முதலே நற்கருணையின் பிரசன்னத்திலே வாழ்ந்து அதை மற்றவர்களுக்கு கொடுக்க அழைக்கப்படுகின்றீர்கள். அன்பின் அடையாளத்தை, நேசத்தின் சின்னத்தைக் கண்டு அனுபவித்து நற்கருணையின்பால் ஆழ்ந்தபக்தி, அன்புகொண்டவர்களாக அதை மற்றவர்களுக்கு கொடுக்கும் நற்கருணை வீரர்களாக மாறுவோமென நீங்கள் ஒவ்வொருவரும் இன்றைய நாளில் தீர்மானம் எடுக்கவேண்டும்" எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ் மறைமாவட்டத்தின் இருபத்தி ஆறு பங்குகளில் இருந்து மூவாயிரத்தி ஐந்நூறுக்கு மேற்பட்ட சிறுவர்களும் ஊக்குவிப்பாளர்களும் பங்குபற்றிய இந்நிகழ்வு ஓர் கண்கொள்ளாக் காட்சியாகவே அமைந்தது. காலையிலேயே புனித

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## பெருந்தொகையான சிறுவர்கள் பங்குபற்றியமை ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்



- அருட்சகோதரி நிர்மலா (நல்லாயன் சபை)

யாழ் மறைமாவட்ட திருப்பாலர் சபை எழுச்சி விழாவில் கலந்துகொள்ள வந்திருந்த தேசிய திருப்பாலத்துவசபை தமிழ்ப்பிரிவுச் செயலர் சகோதரி நிர்மலா பாதுகாவலனுக்கு கருத்துரை வழங்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவரின் பேட்டியின் முழுமையை இரண்டாம் பக்கத்தில் காணலாம்..

## அநீதிக்கும் வன்முறைக்கும் ஆளான சகோதரருக்கு கிறிஸ்துவின் அன்பைக் காட்டுவோம்

### தவக்காலச் செய்தியில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்

திருத்தந்தை அவர்கள் வத்திக்கான் நகரிலிருந்து விடுத்த யூபிலி ஆண்டுக்கான தவக்காலச் செய்தியில் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார். மூன்றாம் உலக நாடுகளில் புதுவிதமான அடிமைத்தனங்களும் துன்பகரமான வறுமை நிலைகளும் பெருந்தொகையான மக்களை வருத்துகின்றன. யூபிலியின் பாதையில் நடந்துகொண்டிருப்பவர்கள் அனைவரும் இந்த அவலக் குரலைச் செவிமடுமத்து அதற்குப் பதிலிறுக்க வேண்டும். ஏழைகளின் தேவைகள் எமது உள்ளத்தை தொடாவிட்டால், ஒரு நல்ல வாழ்க்கை நடாத்துவதற்கு தேவையான அனைத்தும் அவர்களுக்கு கிடைக்கும்படி செய்ய நாம் முயலாதுவிட்டால் யூபிலி ஆண்டின் அருளை நாம் எவ்வாறு கேட்க முடியும் என்று அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். தவக்காலச் செய்தியின் முழுமையை அடுத்த இதழில் காணலாம்.

## யூபிலி ஆண்டு யாத்திரைக் கைந்நூல்

### திருவழிபாட்டு நிலைய வெளியீடு

யூபிலி ஆண்டின் செயற்பாடுகளில் ஒன்றாகிய புனித தலங்களுக்கு யாத்திரை செய்வது பற்றிய ஒரு கைந்நூலை திருவழிபாட்டு நிலையம் வெளியிட்டுள்ளது.

வேதாகமத்தின் அடிப்படையில் யாத்திரை பற்றிய விளக்கம், யாத்திரைக்குரிய ஆயத்தம், சிந்தனை, யாத்திரை மேற்கொள்ளும் முறை, திருத்தலத்தில் சொல்லும் செபங்கள், பாடும் பாடல்கள், யூபிலி ஆண்டின் பலன்களைப் பெற்றுக்கொள்ளும் விதம் ஆகிய விபரங்கள் இதில் அடங்கியுள்ளன. யாத்திரை மேற்கொள்வோருக்கு இது பெரிதும் உதவியாக இருக்கும்.

## பரான் இல்லத்தின் வெள்ளிவிழா



முகமாலையில் அமைந்துள்ள திருவுளப் பணியாளர் சபையின் தாய் மனையான பரான் இல்லத்தின் 25வது அண்டு நிறைவு மாசி 28ஆந் திகதியன்று கொண்டாடப்பட்டது. விழாவுக்கு யாழ் ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமைதாங்கினார். அத்தருணத்தில் சபையின் இயக்குனர் நாயகமான அருள்தந்தை பிரான்ஸ்சுவா ஹமேல் அவர்களும் வருகை தந்திருந்தார்.

மறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 1975 ஆம் ஆண்டு அருள்தந்தை லூயி பரான் அ.ம.தி. அவர்களால் யாழ் மறைமாவட்டத்தில் இச்சபைக்கு அடியிடப்பட்டது.

கனடாவில் இருந்து வந்த அருள்தந்தை பரான் முகமாலையை அதற்குத் தக்க இடமெனத் தெரிந்தெடுத்தார். (தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## சிந்தாகுலத் திரட்டு ஒப்பாரிப் பாடல்கள்

தவக்காலத்தில் பாடப்படுகின்ற ஒப்பாரிப் பாடல்களைக் கொண்ட சிந்தாகுலத் திரட்டு சில காலத்துக்கு முன் மிகவும் பிரசித்தமாயிருந்தது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இவை வீடுகளிலும் ஆலயங்களிலும் பாடப்பட்டு வந்தன. ஆனால் அண்மைக் காலத்தில் இவ்வழக்கம் கைவிடப்பட்டு விட்டது.

கிறிஸ்துவின் பாடுகளை மையமாகக் கொண்ட தமிழர்களின் நாட்டார் ஒப்பாரி இலக்கியத்தையொட்டி இயற்றப்பட்ட சிந்தாகுலத்திரட்டு கருத்தாழமும் உணர்ச்சி வளமும் கொண்டவை. இவை அழிந்துபோகாதிருக்கும்படி அருள்திரு ஞா. பிலேந்திரன் அவர்கள் அவற்றை மீண்டும் அச்சேற்றியுள்ளார். இப்பாடல்களுக்கு எளிமையான நடையில் யாழ் ஜேயம் விளக்கவுரை எழுதியுள்ளார்.

## "அடிமைத்தளைகளை உடைத்தெறிவோம்"

### மனித முன்னேற்ற நடுநிலைய வெளியீடு

இவ்வாண்டுக்குரிய தவக்கால கல்வித் திட்டமாக "அடிமைத்தளைகளை உடைத்தெறிவோம்" என்னும் ஏட்டை ஹியூடெக் மனித முன்னேற்ற நிலையம் வெளியிட்டுள்ளது. தவக்காலத்தின் ஐந்து ஞாயிறுகளிலும் வாசித்துத் தியானிக்கக் கூடிய கருத்துக்களும், ஞாயிறு வழிபாட்டு வாசகங்களின் சிந்தனைகளும் இந்த ஏட்டில் காணப்படுகின்றன.

"போரும் பூசலும் அடக்குமுறைகளும் மனித வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்ததுபோல் இன்றும் இருப்பதுதான் வேதனைக்குரியது. ஏன் இந்த நிலை? மனித உள்ளம் இன்னும் மாறவில்லை. அது மாற வேண்டுமாயின் தனிமனித மனதில் இருக்கும் அடிமைத் தளைகள் உடைக்கப்படாமல் அமைதி ஏற்படப் போவதில்லை" என ஹியூடெக் நிலைய இயக்குனர் அருள்திரு கி. ஜோ. ஜெயக்குமார் நூலின் முகவுரையில் கூறுகின்றார்.

தவக்காலத்தில் எமது வாழ்வைப் புதுப்பித்து அமைத்துக் கொள்ள இந்த ஏடு பெரிதும் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### அன்பு செயல்களால் கிறிஸ்துவின் அன்பை பிரசன்னமாக்குவோம்

'மனம்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்' என்ற அழைப்பு மீண்டும் ஒரு தவக்காலம் வந்துவிட்டதை நமக்கு நினைவூட்டுகின்றது.

தவக்காலம் என்றவுடன் கஷ்டகாலம் என்று நினைப்போர் பலர் இருக்கின்றார்கள். தவக்காலம் எம் ஒவ்வொருவர் மனத்திலும் அருளின் காலம், உறவின் காலம், புதிய ஆரம்பத்தின் காலம் என்பதை தெளிவாக உணர்த்த வேண்டும்.

ஆண்டவர் இயேசுவின் பாடுகள் மரணத்தோடு எம் அன்றாட 'பாடுகளையும் மரணத்தையும்' இணைத்து அவற்றிற்கு இயேசுவின் உயிர்ப்பில் அர்த்தம்காணும் காலம் தவக்காலம் ஆகும்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பின் 2000 மாபெரும் யூபிலி ஆண்டில் நிகழும் தவக்காலம் என்ற வகையில் இத் தவக்காலம் ஒரு விசேட சிறப்பிடம் வகிக்கின்றது. மனந்திரும்பி யூபிலி ஆண்டின் அருளை அடைய எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

இத் தவக் காலத்தில் கிறிஸ்துவில் கொண்டுள்ள பற்றுறுதியைப் புதுப்பித்து புதிய மிலேனியத்தில் புத்துணர்ச்சியுடன் அவரது மீட்பின் மறைபொருளை வாழவும் அதை பிறருக்கு பறைசாற்றவும் துணைபுரியமென திருத்தந்தையவர்கள் தமது யூபிலி ஆண்டு தவக்காலச் செய்தியில் கூறியுள்ளார்.

புனித ஆண்டிலே அனைவரும் ஒப்புரவு பெற திருச்சபை பல்வேறு சந்தர்ப்பங்களை அளித்துள்ளது. யாத்திரைகள், ஞான ஒடுக்கங்கள், திருவருட்சாதனங்கள் என திருச்சபை தரும் எத்தனையோ வழிவகைகளைப் பயன்படுத்தி புதிய பாதையில் காலடி எடுத்து வைக்க அழைப்பு விடுத்துள்ளது.

இந்த ஒப்புரவின்மூலம் பெறப்படும் புது வாழ்வில் விசுவாசம் நம்பிக்கை இறையன்பு என்ற புண்ணியங்களை இன்று முழுமையாக, உணர்வுபூர்வமான விதத்தில் வாழுமாறும், அவற்றிற்கு சான்று பகருமாறும் திருத்தந்தை நம்மை அழைக்கிறார்.

'தவக்காலத்தில் ஏழைகள் பணக்காரர் அனைவருமே பெருந்தன்மையாக அன்பு செய்வதால் கிறிஸ்துவின் அன்பை பிரசன்னமாக்கும்படி அழைக்கப்படுகிறார்கள். இந்த யூபிலி ஆண்டிலே அடிப்படை வாழ்க்கை வசதிகள் இல்லாத பசியால் வாடுகின்ற அநீதிக்கும் வன்முறைக்கும் ஆளான எமது சகோதரருக்கு ஒரு விசேஷ விதத்தில் கிறிஸ்துவின் அன்பைக் காட்டும் படி அழைக்கப்பட்டிருக்கின்றோம். விடுதலை சகோதரத்துவம் எனும் இலட்சியங்களை நனவாக்க இதுவே வழியாகும். புனித ஆண்டானது இந்த இலட்சியங்களை மீண்டும் எம் கண்முன் வைக்கிறது'.

இந்த அருளின் காலத்தில் இறைவனின் மாபெரும் கொடைகளை முழுமையாகவும் நிறைவாகவும் பெற்றுக் கொள்ளஆயத்தமாகுவோம்.

# தேசிய திருப்பாலத்துவ சபை தமிழ்ப் பிரிவு செயலர் அருட்சகோதரி எஸ்.நிர்மலா(நல்லாயன் சபை) - நேர்காணல்

**செவ்வி கண்டவர் அருட்சகோ. எஸ். ஏ. றொஷான்.**

**அருட்சகோ. றொஷான் - இந்த இனிய மாலைவேளையிலே, புனித மடுத்தீனார் குருமடத்திலே பாதுகாவலன் பத்திரிகையின் சார்பில் உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். சற்று முன் தான் நீண்டதொரு பயணத்தின் பின் திரும்பியுள்ளீர்கள் போல் இருக்கின்றது.**

அருட்சகோதரி நிர்மலா - ஆம், காலையில் ஊர்காவற்துறைப் பங்கில் உள்ள திருப்பாலத்துவ சபை சிறார்களை, ஊக்குவிப்பாளர்களை சந்தித்து சின்னம் வழங்கும் நிகழ்வின் பின் திரும்பியுள்ளேன். நேற்றைய தினத்தில் கூட இவ்வாறான ஓர் நிகழ்வில் குருநகர் பங்கில் பங்கு கொண்டேன்

**அ. றொ. - சகோதரி உங்களின் யாழ் வருகைக்கான காரணத்தை நாம் சற்றுத் தெரிந்து கொள்ளலாமா?**

ச. நி. - யாழ் மறைமாவட்ட சபை இயக்குனர் அருள் திரு றெஜி இராஜேஸ்வரனின் அழைப்பின் பேரிலேயே நான் இங்கு வந்துள்ளேன். தேசிய சபையின் தமிழ் பிரிவன் செயலர் என்ற முறையில் மறைமாவட்ட சபையினருடனும், ஊக்குவிப்பாளர்கள், இயக்குநருடனும் கூடி செயல் திட்டங்களை ஆராய்வதும் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பதும் எனது இப்பயணத்தின் நோக்கமாகும்.

**அ. றொ. - யாழ் மறைமாவட்டத்தில் சபையின் வளர்ச்சி பற்றி உங்கள் கருத்தை அறியலாமா?**

ச. நி. - யாழ் மறைமாவட்டத்தில் சபை ஓர் பாரிய வளர்ச்சியை கண்டுள்ளது என்றே கூறுவேன். அவர்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் இங்குள்ள இயக்குநரும், பங்குத் தந்தையர்களும், சபையின் ஊக்குவிப்பாளர்களுமே. என்னுடைய எட்டு வருட காலப் பணியில் மூன்று தடவைகள்தான் யாழ் வர முடிந்தது. 1993ஆம், 1994ஆம் ஆண்டுகளிலும் பின்னர் தற்போது விஜயம் செய்துள்ளேன். 93-98க்கு இடைப்பட்ட காலத்தில் ஓர் அளவிலேயே வளர்ச்சி காணப்பட்டது. ஆனால் இம்முறை ஓர் பாரிய வளர்ச்சியைக் காண்கின்றேன். பங்குகளில் அவர்களின் செயல் திட்டங்களிலும் சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையிலும் ஊக்குவிப்பாளர்கள் தொகையிலும் பாரிய வளர்ச்சியுண்டு.

**அ. றொ. - உங்கள் பணியை செயல்படுத்த உங்களுக்குக் கிடைக்கும் ஆதரவு பற்றிக் கூறமுடியுமா?**

ச. நி. - குறிப்பாக பங்குத் தந்தையர்களும், ஊக்குவிப்பாளர்களும் இயக்குநர் கூட எமக்கு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் தருகின்றார்கள். இதை எனது இக்குறுகிய விஜயத்தின்போது கூட காண முடிந்தது. தமது பங்குகளில் எல்லாம் நிகழ்வுகளை நடாத்த வேண்டும் என்று என்னை வற்புறுத்துகின்றனர். எமது இப்பணியில் யாழில் உள்ள துறவிகளும் ஒத்துழைப்பை வழங்குவதை காண்கின்றேன். இருப்பினும் நான் ஓர் விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது, ஊக்குவிப்பாளர்களுக்கும் எமக்கும் தொடர்புகள் இருந்தபோதிலும் அவை போதியளவு இல்லை என்றே கருதுகின்றேன். உதாரணமாக பிள்ளைகளின் ஆக்கங்களை மிக அரிதாகவே நாம் பெற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் ஊக்குவிப்பாளர்கள் கூடிய கவனம் செலுத்தினால் எமது வெளியீடுகளை உங்கள் பிள்ளைகளின் படைப்புக்களால் அணி செய்யலாம்.

**அ. றொ. - செயல்திட்ட ரீதியாக தேசிய சபைக்கும் மறைமாவட்ட சபைக்கும் இடையில் உள்ள நிலைமை எவ்வாறு இருக்கின்றது என கூற முடியுமா?**

ச. நி. - இது நல்லதோர் வினா. எமது நாட்டின் போரினால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து தடைகளினால் தேசிய மட்டத்தில் நடைபெறும் செயல்திட்டங்களில், பொது அமர்வுகளில் (ஊக்குவிப்பாளர்கள்) கூட்டங்கள் கருத்தரங்குகளில் இங்கிருந்து சமூகம் கொடுக்க முடியாத ஓர் நிலை இருப்பது மனவேதனைக்குரிய ஓர் விடயமே! எமது விஜயங்களும் இதன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளன. இது எமது சபையின் வளர்ச்சிக்கு பின்னடைவாகவே அமைகின்றது.

**அ. றொ. - அருட்சகோதரியே! வன்னி மண்ணிலே பல சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் எமது திருப்பாலர்களுக்கான உங்களின் செயல்திட்டங்கள் பற்றி கூறுவீர்களா?**

ச. நி. - உண்மையிலேயே அங்கு திருப்பாலத்துவ சபையின் இணைப்பாளராகவுள்ள அருள்திரு றெக்ஸ் சவுந்தரா அடிகள், வன்னி மறைக்கோட்ட முதல்வர் இவர்களின் அயராத உழைப்பால் திருப்பாலத்துவ சபையினரின் செயல் திட்டங்கள் யாழ் குடாநாட்டில் உள்ள அதே அளவிலேயே உள்ளன. இவ்வளவு போரின் தாக்கங்கள் மத்தியிலும் அவர்களின் செயல்பாட்டை மெச்சுகின்றேன். ஆயினும் 1998ஆம் ஆண்டுக்கு பின் நாட்டின் அரசியல் நிலைமைகளினால் எனக்கு வ்ன்னிக்கு செல்லமுடியாதது பெரும் கவலையே!

**அ. றொ. - சகோதரி, தமிழ் பிரிவின் செயலராக இருப்பதினால் ஓர் கேள்வியைக் கேட்கலாம் என்று நினைக்கின்றேன். திருப்பாலத்துவ சபையின் செயற்பாடுகளில் தமிழர், சிங்களவர் என்ற பாகுபாடு எதையாவது உங்களின் 8 வருடப் பணியின்போது உணர்ந்துள்ளீர்களா?**

ச. நி. - இல்லைவே இல்லை என்றுதான் கூறுவேன். வேறு மறைமாவட்டங்களில் தமிழர், சிங்களவர் இருசாராரும் இணைந்து நிகழ்த்தும் பல நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளேன். கள்ளம் கபடமற்ற குழந்தை உள்ளங்கள் எவ்வாறு இணைந்து மகிழ்ந்து இருக்கின்றார்கள் என பார்த்து மகிழ்ந்துள்ளேன். இவ்வாறான சந்தர்ப்பங்கள் புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் அவர்கள் காலத்தில் ஏற்படுத்த உதவிசெய்யும் என நம்புகின்றேன்.

**அ. றொ. - திருப்பாலர்களின் யூபிலி எழுச்சி நாள் நிகழ்வுகள் பற்றிய உங்கள் அனுபவத்தை எம்முடன் பகிர முடியுமா?**

ச. நி. - இவ்வாறான பெருந்தொகையான சிறார்கள் தூர இடங்களில் இருந்து கலந்து கொள்வர் என நான் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் திருப்பலியின் போதும் கலை நிகழ்வுகளின் போதும் மகிழ்ச்சியாக ஒற்றுமையாக பங்குபற்றிய நிகழ்வு ஓர் கண்கொள்ளாக் காட்சியாகவே அமைந்தது. இந்நிகழ்வின் ஊடாக திருப்பாலத்துவ சபையின் யாழ் மறைமாவட்டத்தின் வளர்ச்சி எண்பிக்கப்பட்டது என்றே கூறுவேன்.

**அ. றொ. - சகோதரி அவர்களே! உங்களின் சேவையை, பணியார்வத்தைப் பாதுகாவலன் சார்பில் வாழ்த்துகின்றோம். உங்கள் பணி எதிர்காலத்தில் சிறக்க எமது ஆதரவும் செபமும் என்றும் உங்கள் திருப்பாலத்துவ சபைக்குக் கிடைக்கும் என்று உறுதிகூறி விடை பெறுகின்றேன், நன்றி.**

## 26 பங்குகள் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடுத்தீனார் குருமட முன்றலில் ஒன்று கூடிய இச்சிறுவர்கள் 'பான்ட்' இன்னிசை வாத்தியத்துடன் தீபங்கள் கரமேந்தி வண்ண நிறக் கொடிகள் அசைத்து யாழ் ஆயருடன், தேசிய சபையின் தமிழ்ப் பிரிவு செயலாளர் அருட்செல்வி நிர்மலா, மறைமாவட்ட இயக்குநர் அருள்திரு றெஜி இராஜேஸ்வரன் சகிதம் யாழ் பேராலயம் அழைத்து வரப்பட்டு ஆயரின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரி மதுரம் சதுக்கத்தில் மறைவேதியர் ஜெயசீலன் தலைமையில் நிகழ்வுகளும் இடம் பெற்றது. திருப்பாலர் சபையின் செயலாளர் அருட்செல்வி நிர்மலா இந்நிகழ்வில் சாட்சிய வாழ்வுக்கு அழைக்கப்படுபவர்கள் திருப்பாலத்துவ சபை சிறுவர்களே எனக் குறிப்பிட்டு, அவர்கள் அன்பைப் பகிர்ந்து செபத்தில் தமது வாழ்வை கட்டியெழுப்ப வேண்டுமெனவும் அன்றைய எழுச்சிநாளின் அனுபவங்கள் சிறார்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும் எனவும் ஆசித்து விடைபெற்றார். பல பாகங்களில் இருந்து பல ஆயிரக் கணக்கான சிறார்கள் ஒன்றுகூடிய இவ் எழுச்சி நாள்க் காட்சி பல பூக்கள் பூத்துக் குலுங்கும் நறுமண பூங்காவை ஒத்தது என வர்ணித்தார் யாழ் மறைமாவட்ட சபையின் இயக்குநர் அருள்திரு றெஜி இராஜேஸ்வரன் அடிகளார். இந் நிகழ்வில் பங்குபற்றிய 3500 சிறுவர்களில் இருந்து மில்லேனிய பாலகன், பாலகி சிட்டிழுப்பு மூலம் தெரிவுசெய்யப் பட்டனர். காலை முதல் மாலைவரை நடைபெற்ற இப்பெரு நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் மதிய உணவும் தாக சாந்தியும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

செய்தித் தொகுப்பு - அருட்சகோ. எஸ். ஏ. றொஷான்.

## பரான் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

89 வயதான அருள்தந்தை பரான் கனடாவில் இருந்து தமது வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார்.

உலகின் மத்தியில் இருந்து முன்மாதிரியான தனது அர்ப்பண வாழ்வின் மூலம் உலகத்தில் திருச்சபையின் பிரசன்னத்தை உணர்த்துவதே இச்சபையின் சிறப்பம்சமாகும். குருக்கள் மட்டுமன்றி அர்ப்பணித்த பொதுநிலையினரும் குடும்பங்களும் இச்சபையில் அங்கம் வகிக்கின்றனர். அருட்தந்தையர்கள் ரட்னையா, ராஜரட்ணம், பற்றிக் ஞானப்பிரகாசம் மறைந்த அருட்திரு கை துரைசிங்கம் ஆகியோரே இச்சபையால் உருவாக்கப்பட்ட முதல் குருக்களாவர். பொது நிலை அங்கத்தவரான சகோதரர் மருசலீனும் அரம்ப காலத்தில் இருந்தே இருந்தவராவார். இப்போது இவரே இல்லத்தின் அதிபராக இருக்கிறார். இவ் வெள்ளிவிழாவை யொட்டி ஒரு மலரும் வெளியிடப் பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி அரும்புகள்

## 6ஆம் சின்னப்பர்

இவர் 1897ஆம் வருடம் பிறந்தார். ஜியோவான்னி மொந்தினி என்பது இவரின் திருமுழுக்குப் பெயராகும். 23வது வயதில் குருப்பட்டம் பெற்றார். 10 வருடங்களின் பின் வத்திக்கான் செயலகத்தில் பணியாற்றத் தொடங்கினார். 23ஆம் அருளப்பர் பாப்புவானதும் இவரைக் கருதினாலாக நியமித்தார். 1963 வருடம் ஜூன் 21இல் பாப்புவாகத் தெரிவுசெய்யப்பட்டார். 23ஆம் அருளப்பர் ஆரம்பித்த 2ஆம் வத்திக்கான் சங்கத்தை நடத்தி முடித்த பெருமை இவரையே சாரும். எனெனில் இச்சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இச்சங்கமானது 2000 வருட சரித்திரத்தையே மாற்றியமைத்து கி.பி. 62இன் பின் எந்தப் பாப்புவும் தரிசிக்காத ஆண்டவரின் கல்லறையை தரிசிக்க 1965ஆம் வருடம் ஜெருசலேம் சென்றார்.

பிரிந்த சபையாரோடு உரையாடுவதில் பெரும் ஆர்வம் காட்டினார். 1970ஆம் வருடம் மார்கழி 4ஆம் திகதி இலங்கை மண்ணில் கால் பதித்தார். ''மறைபரப்புப் பணி'' ''மக்கள் முன்னேற்றம்'' போன்ற சுற்றுமடல்களை எழுதினார். ஏழைகள் மேம்பாட்டுக்காக பெரிதும் உழைத்து 1988ஆம் வருடம் ஒகஸ்ட் 6ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

## அருள்திரு தோமஸ் அ.ம.தி. அடிகள்

யாழ் நகரிலே பாண்டியன்தாழ்வு என்ற கிராமத்திலே வஸ்தியாம்பிள்ளை தம்பதிகளுக்கு இரண்டாவது கனியாக இவர் பிறந்தார். 1886-03-07 இல் பிறந்த இவர் 06-01-1912இல் அமலமரித் தியாக குருத்துவ திருநிலைக்கு உயர்த்தப்பட்டு 02-02-1928இல் வட இலங்கை யாழ் மறைமாவட்ட தோலகட்டி என்ற இடத்தில் கீழைத்தேசத்து மக்களைக் கொண்டு ட்டாப்பீஸ்ட் முறை வாழ்க்கையில் மறைந்த காட்சி தியான வாழ்வை நிறுவியவர். அண்களுக்காக சபையை நிறுவி குருக்களும் சகோதரர்களும் இணைந்து வாழ வழிவகுத்தார். ஆண்களைப்போல கன்னியர்க்கும் 8-9-1948இல் காட்சித்தியான துறவற சபையை கடவுளுக்கு நிகர் யார் என்ற கோட்பாட்டை தன்வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டு மரியாளின் அன்புக் குழந்தையாக வாழ்ந்து 26-1-1964இல் இறையடி சேர்ந்தார்.

## ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

ஆசிரியர் ஜேக்கப்பிள்ளை அன்னாப்பிள்ளை தம்பதிகளின் ஏழு குழந்தைகளுள் மூவர் குருக்கள். அவர்களுள் ஒருவரே எம் ஆயர் எமிலியானுஸ் பிள்ளை. இவர் ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், வென்னப்புவாவை வளர்ந்த இடமாகவும் கொண்டவர். கொழும்பு கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியில் தனது இளமைக் கல்வியைத் தொடர்ந்தபோது அவரின் ஆற்றல்கள் வெளிப்படத் தொடங்கின. பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறினார். அங்கே உதைபந்தாட்ட அணிக்கு தலைமைதாங்கி தனது தலைமைத்துவத்தையும் ஆளுமையையும் நிருபித்தார். பின் தனது தனித்துவத்தையும் ஞானத்தையும் கொண்டு குருவாகி பின் ஆயராக தம் மந்தையை திறம்பட நடத்தினார். ஆயர் காலத்தில் நடந்த இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மூலமாக தலத்திருச்சபையில் மாற்றங்கள் பலவற்றை கொண்டு வந்தார். கொழும்பு அரசியலை நன்கு அவதானித்து தலத்திருச்சபையை நன்கு திட்டமிட்டு சீரமைப்பு செய்து பல பணிபுரிந்து 1972 ஆடி 23இல் இறையடி சோர்ந்தார்.

## தந்தை பியோ

தந்தை பியோ தென்இத்தாலியில் உள்ள பியெரென்சினா என்னுமிடத்தில் 25 வைகாசி 1887இல் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தார். தமது 15வது வயதில் சன்னியாச மடத்தில் சேர்ந்து தனது குருத்துவக்கல்வியை உடல்நலக்குறைவின் மத்தியிலும் இறையருளின் துணையோடு நிறைவுசெய்து 1910ஆம் வருடத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 8வருடத்தின் பின்னர் தமது உடலில் ஆண்டவரின் ஐந்து திருக்காய வரம் பெறும் பாக்கியம் பெற்றார். இவரே திருச்சபையின் சரித்திரத்தில் இவ்வரம் பெற்ற முதலாவது குரு. இவர் 58 வருடங்கள் குருத்துவப்பணி புரிந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் இவரின் பணியாலும், வாழ்வாலும், ஈர்க்கப்பட்டு ஆன்மீக ஆறுதலும் அமைதியும் பெற்றனர்.

நற்கருணை மீதும் தேவதாய் மீதும் அளவற்ற அன்புகொண்டு இறைவனில் அழ்ந்த மகிழ்ச்சியையும் அன்பையும் அனுபவித்தார். இறுதியாக 23 புரட்டாதி 1968இல் இறைவன் அவரை அழைத்துக்கொண்டார்.

அன்பார்ந்த வாசகர்களே !

கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட தனிநாயகம் தமிழ் மன்றத்தின் ''பணி அரும்புகள்'' பகுதியூடாக நாம் நடத்தும் '20ஆம் நூற்றாண்டின் ஆன்மீக நட்சத்திரம்' என்னும் போட்டி நிகழ்ச்சி பற்றி கடந்த மூன்று பாதுகாவலன் இதழ்களில் வாசித்து வருகிறீர்கள்.


இப்போட்டியில் நாம் உங்கள் தெரிவுக்காக பத்துப்பேரை அறிமுகம் செய்துள்ளோம்.

1. அன்னை திரேசா, 2. இரண்டாம் அருளப்பர் சின்னப்பர், 3. சுவாமி ஞானப்பிரகாசர், 4. 23ஆம் அருளப்பர், 5. கார்டினல் ஒஸ்கார் றொமேரோ, 6. அருள் திரு பிலிப் பொன்னையா, 7. 6ஆம் சின்னப்பர், 8. அருள்தந்தை தோமஸ் அ.ம.தி., 9. ஆயர் எமிலியானுஸ்பிள்ளை, 10. தந்தை பியோ

இப்போது நீங்கள் போட்டியில் கலந்து கொள்ளும் நேரம் வந்துவிட்டது. நாம் அறிமுகம் செய்துள்ள பத்துப்பேரில் கடந்த 20ம் நூற்றாண்டில் விசுவாசத்தின் சுடர்களாக ஒளிர்ந்து மக்களுக்கு அன்மீக நட்சத்திரங்களாக விளங்கியவர்களென நீங்கள் கருதும் மூவரின் பெயரை உங்கள் தெரிவு அடிப்படையில் எமக்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் தெரிவுகளை எழுத கீழுள்ள கூப்பனைப் பயன்படுத்தலாம். மேலதிக கூப்பன்கள் தேவைப்படின் இக்கூப்பனைப்போல பிரதிசெய்தும் பயன்படுத்தலாம். ஆனால் ஒருவர் ஒருமுறை மட்டுமே தெரிவுகளை அனுப்பமுடியும்.

20ம் நூற்றாண்டின் ஆன்மீக நட்சத்திரம் - எனது தெரிவுகள்

முதலாவது தெரிவு : ____________________
இரண்டாவது தெரிவு : ____________________
மூன்றாவது தெரிவு : ____________________
எனது பெயர் : ____________________
விலாசம் : ____________________



| ஒளி : 11 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர் : 02 | எம் வாழ்வின் வழி யேசு |

அன்புநிறை கண்மணிகளே !

நற்கருணை நாதரின் நல்லாசிகள் உங்களுள் நிறைவதாக.

தவசுகாலம் வந்து விட்டது என்பதன் அடையாளமாக உங்கள் நெற்றியில் விபூதி இடப்பட்டதல்லவா? இதன் அர்த்தம் திருப்பலியின் பொழுது மறையுரையில் கேட்டீர்கள் அல்லவா? இந்தக் காலத்தின் அருமை பெருமையினை ஆழமாக நாம் சிந்திக்கவேண்டும். மாபெரும் மகிமை நிறை யூபிலி ஆண்டின் தனிப் பெரும் தலைவர் கிறிஸ்துவின் சிலுவைப் பாதையின் ஒவ்வொரு நிலையையும் உங்கள் மனத்திரையில் போடுங்கள். தியானியுங்கள். உங்களுள் இருக்கும் சின்னத்திரையை இக்காலத்தில் உங்கள் மனப்பலம் கொண்டு ஒதுக்கிவையுங்கள்.

ரியூசன் ரியூசன் என்று காலம் நேரம் தெரியாது ஓடித்திரிவதைக் கட்டுப்படுத்தி, அருள்நாதருடன் கலந்துரையாட நேரம் ஒதுக்குங்கள்.

தவசுகாலம் விடிவின் காலமாக மாற நிதம் செபியுங்கள்

அன்பின்
அன்புவழி

## பாசமிகு தந்தை

- அருட்சகோதரன் நிர்மலறாஜ்

மூவொரு கடவுள் மூன்று ஆட்களில் முதன்மையானவர். பாசமிகு தந்தையாவார். அவர்தான் இந்த இனிய உலகைப் படைத்தார். நமக்கு உணர்வைக் கொடுத்து தம்முறவை வளர்த்தார்.

ஏக மகனாம் இயேசுவை அனுப்பி எம்மைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்டார்.

அன்புதான் இன்ப ஊற்று
அன்புதான் உலக மகா சக்தி
அன்புதான் பாசமிகு தந்தையின் படைக்கலம்

இன்று மனிதம் ஆயுத அச்சுறுத்தலால் கலங்குவதை விட, அன்பின்றி வரண்டு வாடிநிற்கிறது. இந்த வாட்டத்தைப் போக்கவே பாசமிகு தந்தை தம் மகனைப் பாருக்கு அனுப்பினார்.

''அன்பு தன்னலத்தைத் தேடாது
அன்பு அன்புக்காக அனைத்தையும் தாங்கிக்கொள்ளும்''

(1 கொரி. 13 : 5-4)

இறைமகன் இயேசு அனைத்து சோதனைகளையும் வாதனைகளையும் பாசமிகுந்த தந்தையின் சித்தப்படி எமக்காக ஏற்றுக்கொண்டார். பாசமிகு தந்தையின் பாசத்தை அறிந்த நாம், அவரின் அன்பு மகனின் திருப்பாடுகளைத் தியானிக்கும் இக்காலத்தில் எம் உள்ளங்களை ஒருமுறை உற்றுநோக்குவோம். உள்ளத்தின் கறைபோக்கி பாசமிகுந்த தந்தையிடம் தனயன் வழியில் செல்வோமாக.

## கல்வி ! விளையாட்டு !!

- மன்டோ

''காலை எழுந்தவுடன் படிப்பு பின் கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுவதும் விளையாட்டு'' என்பது புகழ்மிக்க கவிஞனின் வாக்கு நாங்களோ !

படிப்பு, படிப்பு என்று நாள் முழுதும் அலைந்து திரிகிறோம். அதனால் உடல் உளச் சோர்வுக்குள்ளாகி நோயின் பிடியில் சிக்கித் தவிக்கிறோம்.

விளையாட்டு என்றதும் அதன் அர்த்தம் தெரியாது, அதனை ஒதுக்கி விடுகிறோம். விளையாட்டு வீண்வேலை என்று எம்மில் பலர் நினைக்கின்றனர். இது தவறு.

உடல் நலம், உளநலம் பேணும் திறன் தருவது விளையாட்டு. விளையாட்டின் ஊடாக பாலர் தொடங்கி, பெரியவர் வரை கற்றுக்கெள்ள நிறைய விடயங்கள் உண்டு.

விஞ்ஞான ஆய்வுகள் மூலம் விளையாடுபவரின் இதயம் சிக்கனமாக இயங்கும், சக்தியைச் செலவிடுவதில் சிக்கனமாக இருக்கும், உடல் உள உறுதி பேணப்படும் என நிருபிக்கப்பட்டுள்ளது.

சின்னத்திரை முன் இருந்து விளையாட்டைச் சும்மா இரசிக்காது, மாலை வேளையில் சிறிதுவேளை (45 நிமிடம்) திடலில் இறங்கி, உடற்பயிற்சி செய்யுங்கள். அதனால் வரும் நன்மைகளை நீங்களே உணர்வீர்கள்.

உங்கள் தெரிவுகளை 15-04-2000 முன்னதாக எமக்கு கிடைக்கும்படியாக அனுப்பவேண்டிய முகவரி :

பணி அரும்புகள்
பாதுகாவலன்
த.பெ.இல. - 02, யாழ்ப்பாணம்

- வாக்குகள் அடிப்படையில் 20ம் நூற்றாண்டின் ஆன்மீக நட்சத்திரமாக தெரிவு செய்யப்படுபவரை முதல் தெரிவாக தெரிவுசெய்பவர்களில் மூவர் குலுக்கல் மூலம் பரிசுக்கு தெரிவு செய்யப்படுவர்.
- 1ஆம் பரிசு 500, ரூபா 2ஆம் பரிசு 250, ரூபா 3ம் பரிசு 100 ரூபா ஆறுதல் பரிசாக 10 பேருக்கு அழகியவண்ணக் கிறிஸ்தவப் படங்கள் வழங்கப்படும்.
- இன்றே போட்டியில் பங்குபற்றுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் இப்போட்டியை அறிமுகம் செய்யுங்கள்.
- போட்டி முடிவுகள் பாதுகாவலன் ஈஸ்ரர் சிறப்பிதழில் வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் இறுதி ஏழு வார்த்தைகள்

# The seven last words of Jesus Christ

**கடைசி வேளையில் பேசும் வார்த்தைகள் செய்யும் செய்கைகள் எல்லாம் எவ்வளவு மதிப்புக்குரியவை பெறுமதியானவை.**

எமது அன்புக்குரியவர் ஒருவர் மாற்றலாகிப் போகிறார் அல்லது தூரப் பிரயாணம் போகிறார் என்றால் அவர்களோடு உறவுகொள்ளும் கடைசி நாட்கள், மணித்துளிகள், சந்திப்புக்கள் எல்லாம் பாசப்பதிவுகளாகவே எம்மிதயத்தில் இடம்பிடிக்கும். கடைசி வேளையில் பேசும் வார்த்தைகள் செய்யும் செய்கைகள் எல்லாம் எவ்வளவு மதிப்புக்குரியவை பெறுமதியானவை என்பதை நாம் நன்கறிவோம்.

இதனிலும் பார்க்க எமக்குத் தெரிந்த, நன்கு அறிந்த, அதிலும் மிகவும் அன்போடு உறவாடிய ஒருவர் மரணித்துவிட்டால் அவர் இறுதியாகப் பேசிய விடயங்கள் சொன்ன சொற்கள் உச்சரித்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் உணர்வு பூர்வமாக உள்ளத்தை தொடுகின்றவையாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வார்த்தைகளின் நிழலிலேயே பலர் தமது காலத்தைக் கழிப்பதை நாம் நாம் காண்கிறோம்.

**பெரிய வெள்ளி ஆராதனையில் இந்த ஏழு வார்த்தைகளைத் தியானிப்பது வழிபாட்டின் மிக முக்கிய அம்சமாக அமைகிறது. இதில் கோடிட்டுக் காட்டப்படவேண்டிய விடயம் என்னவென்றால் இந்த ஏழு வார்த்தைகளும் புதிய ஏற்பாட்டிலேயே அதிலும் நான்கு நற்செய்திகளிலுமே காணப்படுவதாகும்.**

இறைமகன் இயேசு எமது அன்புக்குரியவர். மிகவும் அன்புக்குரியவர். இவ்வன்புக்குரியவரின் மரணத்திற்கு முன், சிலுவையில் உச்சரித்த கடைசி வார்த்தைகள் எவ்வளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நாம் நன்குணர்கிறோம். இயேசுவின் இந்தக் கடைசி ஏழு வார்த்தைகளும் எமது கிறிஸ்தவ பாரம்பரியத்தில் மிக முக்கிய இடம்பெறுகின்றன. குறிப்பாக பெரிய வெள்ளி ஆராதனையில் இந்த ஏழு வார்த்தைகளைத் தியானிப்பது வழிபாட்டின் மிக முக்கிய அம்சமாக அமைகிறது. இதில் கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் இந்த ஏழு வார்த்தைகளும் புதிய ஏற்பாட்டிலேயே அதிலும் நான்கு நற்செய்திகளிலுமே காணப்படுவதாகும்.

இருப்பினும் இவ்வேழு வார்த்தைகளும் ஒரே நற்செய்தியில் காணமுடியாது. மாற்கு, மத்தேயு இருவரும் ஒருமித்த ஒரே ஒரு வார்த்தையை குறிப்பிடுகிறார்கள். லூக்கா வேறு மூன்று வார்த்தைகளைத் தருகிறார். யோவான் தமது நற்செய்திக்கே உரித்தான தனித்துவமான மூன்று வார்த்தைகளைக் கூறுகின்றார். இவ் வார்த்தைகளின் ஒளியிலே எம் வாழ்வைச் சிந்தித்து அவர் வழியில் எம்மைக் காண்போம்.

## என் இறைவா
## என் இறைவா
## ஏன் என்னைக் கைவிட்டீர்?

(மாற். 15:34, மத். 27:46)

இவ்வார்த்தைகளை திருப்பாடல் 22இலும் காணலாம். இத்திருப்பாடலில் சொல்லப்படுவது போல இறைவனில் ஆழமான நம்பிக்கையுள்ள ஒருவன் அநீதமுறையிலே தன் பகைவரால் துன்புறுத்தப்படுகின்றான். நண்பர் கைவிட்டு விட இவன் பகைவர் சூழ்ந்து கொள்கின்றனர். உடலாலும் உள்ளத்தாலும் வேதனையுறுகின்றான். இந்நிலையில் இந்த மனிதன் கடவுளை நோக்கிக் கதறி, கண்ணீர் வடிக்கிறான். ''என் கடவுளே, என் கடவுளே, நீருமா என்னைக் கைவிட்டு விட்டீர் . . .!

திருப்பாடலில் வருகின்ற இம்மனிதனின் நிலையைத்தான் இயேசுவும் அனுபவிக்கிறார். பாவமறியாதவர். பரிசுத்தர். நல்லதையே சிந்தித்து நன்மையே புரிந்தவர். இப்போ ஒரு துரோகி எனத் தூற்றப்பட்டு, வானத்திற்கும், பூமிக்குமிடையே தொங்குகிறார். ஆறுதல் கொடுக்காவிட்டாலும், குறைந்தபட்சம் ''பாவம்'' என்று பரிதாபப்படுவதற்குக் கூட அவர்கள் எண்ணவில்லை. மிகவும் நெருக்கமாக உறவாடிய ஒரு சிலரைத் தவிர, ஏனையவர்கள் கைவிட்டு விட்டார்கள். அன்போடு பழகிய அப்போஸ்தலர்களில் ஒருவர் மறுத்துவிட்டார். மற்றொருவர் ஏமாற்றிவிட்டார். மற்றவர்கள் மறைந்துவிட்டார்கள். இவர்கள்தான் கைவிட்டாலும் இறைத்தந்தையுமா என்னைக் கைவிட்டுவிடுவார்? என்ற ஏக்கத்தில் எழுந்த வார்த்தைகளாகக் கூட இருக்கலாம். இறைத் தந்தை உடன்பதில் கொடுக்காவிடினும், உலகே கேள்வியுறாத, வரலாறே கண்டிராத வகையில், உயிர்ப்பு என்ற விலைமதிக்கப் பெறாத விண்ணகக் கொடையை, மகிமையை மகனுக்கு வழங்குகிறார்.

இவ்வார்த்தைகள் இன்று எங்கள் அனுபவமில்லையா? இவை இன்றும் எதிரொலிக்கின்றன. வெளியே சிரித்தாலும், உள்ளே சிதைந்துபோய் இருக்கிறோம். கட்டிய கணவனை இழந்து தவிக்கும் மனைவியரின் சோகக் கதைகளும், பெற்ற பிள்ளையையே இழந்து துடிக்கும் தாய், தந்தையரின் கண்ணீரும், தந்தையின் முகம் தெரியாமல் வளரும் பாலகர்களின் ஏக்கமும், உற்ற உறவைப் பிரிந்து உருகிப்போகும் உள்ளங்களின் சோகங்களும், யாருடைய காதுகளாலும் கேட்கப்படாத சோகம்தோய்ந்த சம்பவங்களும், இயேசுவோடும் அவரின் வார்த்தைகளோடும் எம்மையும் இணைக்கின்றன அல்லவா!. . .

எமது அழுகுரல்களுக்கும் தந்தையாகிய இறைவன் செவிசாய்ப்பார் என்ற நம்பிக்கையை இயேசுவின் வார்த்தைகள் எமக்கு எடுத்துச் சொல்கின்றன. எமது அழுகைகளை எல்லாம் ஆனந்தமாக மாற்றக்கூடியவர் அவரே. ஆண்டவரின் அருளுக்காகக் காத்திருப்போம்.

**கட்டிய கணவனை இழந்து தவிக்கும் மனைவியரின் சோகக் கதைகளும், பெற்ற பிள்ளையையே இழந்து துடிக்கும் தாய், தந்தையின் கண்ணீரும், தந்தையின் முகம் தெரியாமல் வளரும் பாலகர்களின் ஏக்கமும், உற்ற உறவைப் பிரிந்து உருகிப்போகும் உள்ளங்களின் சோகங்களும், யாருடைய காதுகளாலும் கேட்கப்படாத சோகம்தோய்ந்த சம்பவங்களும், இயேசுவோடும் அவரின் வார்த்தைகளோடும் எம்மையும் இணைக்கின்றன அல்லவா !**

## தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் இவர்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை

(லூக். 23 : 34)

மன்னிப்பதும் அதனை மறப்பதும் இலகுவானதொன்றல்ல. அதிலும் பகைவரை மன்னிப்பது என்பது மிகக் கடினமானது. இதிலும் வானத்துக்கும் பூமிக்கும் இடையே மூன்று ஆணிகளில் தொங்கிக்கொண்டு, துன்பத்தை அணுவணுவாக அனுபவித்துக்கொண்டு, "தந்தையே இவர்களை மன்னியும்..." என்று தந்தையிடம் மன்றாடி, மனதார மன்னிப்பது மனித கண்ணோட்டத்திலே இப்படியும் மன்னிக்க முடியுமா? என்ற வினா எழலாம். ஆனால், இது முடியுமென இயேசு வாழ்ந்து காட்டியிருக்கிறார். ஆம், இயேசு மனதார மன்னித்திராவிடின் மரணத்தை வென்றிருக்க முடியாது!...

இயேசுவின் பணிவாழ்வில் இயேசுவைத் தமது பகைவராகக் கொண்டவர்களோடு தம் உறவைக் கைவிடவில்லை. அவர்களுடைய அழைப்பையேற்று விருந்துண்ணச் செல்கிறார். அப்படியான சந்தர்ப்பங்களில் அவர்களோடு உரையாடத் தவறவில்லை. சந்திப்புக்களையும், உரையாடல்களையும் மனமாற்றத்தின் ஆரம்பக் கட்டங்களாக அமைத்துக்கொள்கிறார்.

***மன்னிப்பதும் அதனை மறப்பதும் இலகுவானதொன்றல்ல. அதிலும் பகைவரை மன்னிப்பது என்பது மிகக்கடினமானது.***

இம்முயற்சியில் நிக்கதேமு போன்றவர்கள் மனம் மாறினார்கள். ஆனால், பல தடவைகளில் இயேசுவை எதிர்த்தவர்கள் தமது கடினப்போக்கிலேயே வாழ்ந்து, தமக்குச் சவாலாய் இருந்த இவரைக் கைது செய்து, கலகக்காரன் பட்டியலிலே சேர்த்து கழுமரமேற்றிக் கொல்லுகிறார்கள்.

சிலவேளை கல்வாரியில் முடிந்த பலருடைய கதைகளுள் இதுவும் ஒன்றாகலாமென்று அவர்கள் நினைத்திருக்கலாம். அல்லது தங்கள் பரம விரோதியின் அத்தியாயம் சிலுவை மரணத்துடன் முடிந்துவிட்டது என்றும் கருதியிருக்கலாம். எது எப்படியிருப்பினும் அவர்கள் செய்வது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லைத் தான்!...

யாருக்காவது யாரும் பகைவர் என்றால் அவர்களை ஒழித்துக்கட்டுவதுதான் எமக்கு முதலில் தென்படுகின்ற, நன்கு தெரிந்த வழியாகலாம். இவ்வழியே இலகுவானதாகவும் தோன்றலாம். ஆனால், நிச்சயமாக கிறிஸ்தவ வழிமுறையாக இருக்காது. நாம் வாழுகின்ற இன்றைய சூழலில், எம் அன்புக்குரிய உறவுகளைப் பிரித்து, அறுத்து, சிதைத்து சொல்ல முடியாத துன்பங்களையும், ஆற்றமுடியாத வடுக்களையும் ஏற்படுத்த காரணங்களாக இருந்தவைகளையும், காரணிகளாய் இருந்தவர்களையும் மறந்தும் மன்னிக்க முடியாது, மன்னிக்கக் கூடாது என்ற மனநிலைதான் மேலோங்கி நிற்கிறது. மனதார மன்னித்தால்தான் மனுமகன் மாட்சிபெற்றார். மகிமையடைந்தார். கடவுளின் கருணையின் காலத்திற்காகக் காத்திருப்போம்.

**எம் அன்புக்குரிய உறவுகளைப் பிரித்து, அறுத்து, சிதைத்து சொல்லமுடியாத துன்பங்களையும் ஆற்றமுடியாத வடுக்களையும் ஏற்படுத்த காரணங்களாக இருந்தவைகளையும், காரணிகளாய் இருந்தவர்களையும் மறந்தும் மன்னிக்க முடியாது, மன்னிக்கக் கூடாது என்ற மனநிலைதான் மேலோங்கி நிற்கிறது.**

## இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்

(லூக். 23 : 43)

கல்வாரி மேட்டில், இரு கள்வர்களுக்கு இடையில் இயேசு சிலுவையில் அறையப்படுகிறார். மேலே வானம், கீழே பூமி. சிலுவையில் தொங்கும், காட்சி இத் துன்பகரமான மரணம் அரசுக்கு எதிராக புரட்சிசெய்யும் கலகக்காரர்களுக்குத் தண்டனையாகக் கொடுக்கப்பட்டது. இரு குற்றவாளிகளுள் ஒருவன் அரச காவலர்களோடு சேர்ந்து இயேசுவை பரிகசிக்கின்றான். மற்றவன் அவனைக் கடிந்துகொள்கிறான். தாம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது முறையானது, நீதியானது என்பதை ஏற்றுக் கொள்கின்றான். இவ்விறுதி வேளையில் இயேசுவின் இரக்கத்தை இறைஞ்சுகின்றான்.

நமது மன்றாட்டங்களுக்கும், தேவைகளுக்கும் இறைவன் காலம் தாழ்த்திப் பதிலளிக்கிறார் எனப் பலவேளைகளில் கூறியிருக்கிறோம். ஆனால், அவரின் கொடைகள் எந்தெந்த காலங்களில் கொடுக்கப்பட வேண்டுமோ அந்தந்தத் தருணங்களில் நிறைவேற்றுவதுதான் தந்தையின் சிறப்பு. இவ்வாறே இக்குற்றவாளியின் இறைவேண்டல், 'இன்றே' 'இப்போதே', 'இக்கணமே' என இறைமகனால் விடையளிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமையாக நிறைவேற்றிய உண்மையுள்ள ஓர் ஊழியனாக தமது உயிரை தம்முடைய் தந்தையின் கரங்களில் கையளித்து இறைசித்தத்தை மகிமைப்படுத்துகிறார்.**

இறையிரக்கம், இரக்கம் காட்டப்படக் கூடாதவர்களுக்கும் இரக்கம் காட்டும், கருணை கொள்ளப்படக் கூடாதவர்களுக்கும் அன்பு செலுத்தும் என்பதை இந் நிகழ்வினூடாக எண்பிக்கிறது. ஆம், இயேசுவின் இரக்கம், ஊதாரியை அரவணைத்து விபச்சாரியை மன்னித்து பாவியோடும் பந்தியமரும். அதனால், குற்றத்தைக் கழுவி, மனக் குழப்பத்தைப் போக்கி, கலக்கத்தை நீக்கித் தெளிவையும், நிம்மதியையும், மனமகிழ்வையும் தருகிறது. ஏன்?... இன்று நாங்கள் வாழ்வதும், இயங்குவதும், இருப்பதும் கூட அவரது இரக்கத்தினால் தான்.

## தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்

(லூக்.23 : 46)

இவ்வார்த்தைகளை திருப்பாடல் 31இல் காணலாம். இவ் இறை வேண்டலை ஒவ்வொரு யூதத் தாயும் தனது பிள்ளைக்கு சிறு பராயத்திலிருந்தே சொல்லிக்கொடுக்க வேண்டும். இவ் இறை வேண்டல் தான் நாளின் கடைசி வேண்டுதலாக இருக்கும். எனவே, அன்னை மரியாவும் பாலகன் இயேசுவுக்கு இவ்வேண்டலை உணவோடு சேர்த்து ஊட்டியிருப்பாள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இயேசு பாலகனாக வளர்ந்து, சிந்திக்கத் தொடங்கும் வேளையிலிருந்து விண்ணகத் தந்தைக்கும் தமக்குமுள்ள உறவை உணர்ந்து கொள்ளுகின்றார். இயேசுவின் பன்னிரெண்டாவது வயதில் நடந்த சம்பவம் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது. ஜெருசலேம் ஆலயத் திருநாள் கடமைகளை நிறைவேற்றிவிட்டு இயேசுவின் பெற்றோர், உற்றார் வீடு திரும்புகையில், அவர் ஆலயத்திலேயே தங்கிவிடுகிறார். அன்னை மரியாவும், தந்தை சூசையும் அங்கலாய்ப்போடும், ஆதங்கத்தோடும் தேடி, மூன்றாம் நாள் ஆலயத்தில் கண்டபோது, தமது தந்தையின் அலுவல்களில் அமிழ்ந்திருப்பதாகக் கூறுகின்றார்(மத்.2 : 50) தந்தை - மகன் உறவு வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து முழுமை பெறுகின்றது. அதனால்தான், தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதையே தமது உணவாகக் கொள்கிறார். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே தமது பணியாக்குகிறார். (யோவா. 6 : 39)

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமையாக நிறைவேற்றிய உண்மையுள்ள ஓர் ஊழியனாக தமது உயிரை தம்முடைய தந்தையின் கரங்களில் கையளித்து இறைசித்தத்தை மகிமைப்படுத்துகிறார். தந்தை விரும்பினால் தமது துன்பக்கலத்தை நீக்கட்டும் என்றார். இருப்பினும், தமது விருப்பமல்ல தந்தையின் சித்தமே நிறைவேறட்டும் என்கிறார் (லூக்.22:42). ஆம், இயேசுவின் இறைவேண்டலின் அர்த்தம் அங்குதான் பிறக்கிறது. தந்தைக்குத் தம்மைக் கையளித்து அவருக்குத் தம்மை காணிக்கையாக்குகிறார்.

**கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை இரசமாக மாற்றிய நிகழ்வு, கல்வாரியில் நிகழப்போகும் நிகழ்விற்கு ஒரு அற்புதமான முன்னடையாளமேயாகும். கானாவூரில், தாயின் வேண்டுகோளுக்கிணங்கி நிகழ்த்தப் பட்டது. கல்வாரியில், தாமே மாபெரும் கொடையாகத் தமது தாயை அன்புச் சீடருக்குக் கொடுக்கிறார்.**

## அம்மா இவரே உம் மகன், இவரே உம் தாய்

(யோவான் 19 : 26, 27)

மகன் சிலுவையில் தொங்குகிறார். பெற்ற தாய் அதனடியில் நின்று கொண்டு துடிதுடித்திருப்பாள் என்பதா? அல்லது தமது மகனின் வாழ்நாளில் பயணித்து, பாடுகளில் பங்கெடுக்க கொடுத்து வைத்தவள் என்பதா? எப்படியிருப்பினும், மனித கண்ணோட்டத்திலே அந்நேரத்தில் அவள் வியாகுலத்தாய்தான்.

இருப்பினும், யோவான் நற்செய்தியாளர் கானாவூர் திருமண நிகழ்வுக்கும் (யோவான்.2), கல்வாரி நிகழ்ச்சிக்கும் (யோவான்.19) இடையே ஒரு தொடர்பைக் காட்ட விளைகிறார். இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் தமது தாயை "அம்மா" என்றே அழைக்கிறார். அதாவது கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை இரசமாக மாற்றிய நிகழ்வு, கல்வாரியில் நிகழப்போகும் நிகழ்விற்கு ஒரு அற்புதமான முன்னடையாளமே ஆகும். கானாவில் தாயின் வேண்டுகோளுக்கிணங்கி நிகழ்த்தப்பட்டது. கல்வாரியில் தாமே மாபெரும் கொடையாகத் தமது தாயை அன்புச் சீடருக்குக் கொடுக்கிறார். இவ்வன்புச் சீடன், இயேசுவால் அன்பு செய்யப்படும் அனைத்துச் சீடர்களையும் சுட்டி நிற்கிறார். இந்த அன்புச் சீடர்கள் யாரென்றால் கிறிஸ்துவின் பெயரைத் தாங்குபவர்கள் மட்டுமல்லாது, அவரின் வார்த்தையின் வழி வாழ்வோரையும் குறிக்கிறது. இவ்வாறாக, அவர் வார்த்தையின் படி வாழ்பவர்கள் அனைவருக்கும் அவள் தாயாக விளங்குகிறாள்.

**ஒரு குழந்தைக்கு எப்படியாக அப்பா, அம்மா இன்றியமையாதவர்களோ, அதேபோல நம்பிக்கை கொண்டவருக்கும் ஆன்மீக குடும்பத்தின் தந்தையும், தாயும் முக்கியமானவர்கள்.**

ஏவாள், படைப்பின் முதற் பெண்ணாகத் தரப்படுகின்றாள். இப்போது, மரியா புதிய ஏவாள் புதுப்படைப்பின் தாயாகக் கொடுக்கப்படுகின்றாள். மரியாவும், சிலுவையடியில் நிற்கும் இயேசுவின் அன்புச்சீடரும் இயேசு - குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அத்தோடு இயேசுவின் இவ்வுலகப் பணியை இவர்களே தொடர்ந்தாற்றவும் பணிக்கப்படுகிறார்கள். மரியாவும், அன்புச் சீடரும் இயேசு - குழுமத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, இன்னும் பலரை பரம தந்தையின் பிள்ளையாக்குகின்றனர். சிலுவையடியில் நின்றுகொண்டு தந்தையின் சித்தத்திற்கு எப்படியாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று, மகன் இயேசுவுக்கு கற்றுக்கொடுத்த படிப்பினையை இப்போது தாய் மரியா தமது இத்துன்பகரமான வேளையிலும் வாழ்ந்துகாட்டுகிறாள்.

இயேசுவின் இச்செயலினூடாக திருச்சபை கிறிஸ்தவ வாழ்வின் உள்ளுயிரை உணர்ந்து கொள்கிறாள். அதாவது, இயேசுவில் நம்பிக்கை கொள்பவர் ஆன்மீகக் குடும்பத்தின் அங்கத்தவராக விளங்குகின்றார். ஒரு குழந்தைக்கு எப்படியாக அப்பா, அம்மா இன்றியமையாதவர்களோ, அதேபோல நம்பிக்கைகொண்டவருக்கும் ஆன்மீக குடும்பத்தின் தந்தையும், தாயும் முக்கியமானவர்கள். அவர்கள்தான் விண்ணத்தந்தையும் தாய் மரியாவும் இப்படிச் சொல்வது, எந்த வகையிலும் படைப்பின் காரணராம் கடவுளாகிய தந்தைய்யை படைக்கப்பட்டவர்களுக்கு (உதாரணமாக அன்னை மரியா) சமமாக எண்ணவோ, ஒப்பிடவோ எடுக்கும் முயற்சியல்ல. மாறாக, படைப்பின் பெருமையைப் பார்த்துணர்ந்து படைத்தவனின் மகிமையைப் புகழ்ந்து போற்றுகின்ற முயற்சியே.

எமக்குத் தந்தை ஒருவர் இருக்கிறார். அவர்தான் விண்ணகத் தந்தை. தாய் ஒருவர் தரப்படுகின்றாள் அவர்தாம் அன்னை மரியா. அன்னை மரியாவைப் போல, அன்புச் சீடரைப் போல தந்தையின் சித்தத்திற்கு அமைவோம். அன்புச் சீடராக எம்மையாக்குவேரம்.

**எமக்குத் தந்தை ஒருவர் இருக்கிறார். அவர்தான் விண்ணகத் தந்தை. தாய் ஒருவர் தரப்படுகின்றாள். அவர்தாம் அன்னை மரியா.**

## தாகமாய் இருக்கிறது

(யோவா.19 : 28)

கடவுளின் கருணைக்காகத் கத்திக்கத்திக் களைந்து போன ஒருவரை திருப்பாடல் 69இல் காண்கின்றோம். களைப்படைந்து இருக்கின்ற போது சாதாரணமாக தாகம் ஏற்படுக்கிறது. அல்லது காயமடைந்து இரத்தம் வெளியேறினால் இயற்கையாகவே இன்னும் அதிக தாகம் ஏற்படும். அதிலும், அடிக்கப்பட்டு, உதைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, இப்போ சிலுவையில் தொங்குகின்ற வேளையில் இயேசு ஒரு துளி நீருக்காக தவியாய்த் தவித்திருப்பார். இருப்பினும், யோவான் நற்செய்தியாளரின் கருத்துப்படி, இயேசுவின் தாகம் வெறும் தண்ணீருக்கான தாகம் மட்டுமல்ல இதனைவிட உயர்ந்த ஓர் ஆன்மீக தாகத்தைக் குறிப்பிடுவதை அவதானிக்கலாம். ஏனென்றால், இந்நற்செய்தியில் இயேசு ஒரு பிரயாணத்தின் பின்னர் பிதாப்பிதா யாக்கோப்பினுடைய கிணற்றோரமாய் அமர்ந்து (யோவா.4 : 6) தாகம் தணிப்பதற்கான சந்தர்ப்பத்தை, சமாரியப் பெண்ணுடனான உறவை ஏற்படுத்தும் முக்கிய தருணமாக மாற்றிக்கொள்கிறார். யாக்கோப்பின் கிணற்றடியில் தாகத்தைத் தணிக்கும் சந்தர்ப்பத்தை, மேலும் ஓர் உயர்ந்த ஆன்மீக தாகத்தைப் போக்கும் வாய்ப்பாக பயன்படுத்தினார் என்றால், அவ்வாறே சிலுவையின் தாகத்தையும் நாம் நோக்கவேண்டும்.

தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதையே தமது பணியின் உணவாகவும், பானமாகவும் கொள்கிறார். சிலுவை மரணம் மனித [illegible] சித்தமாகிறது. இதனை நிறைவேற்றக் காத்திருக்கிறார்.

**யோவான் நற்செய்தியாளரின் கருத்துப்படி, இயேசுவின் தாகம் வெறும் தண்ணீருக்கான தாகம் மட்டுமல்ல; இதனைவிட உயர்ந்த ஓர் ஆன்மீக தாகத்தைக் குறிப்பிடுவதை அவதானிக்கலாம்.**

ஏனென்றால், எதற்காகத் தாகமுற்றாரோ அதற்கான தகுந்தநேரம் அதுதான்.

பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ (மத் 25 : 44) இருக்கும் 'மிகச்சிறியோர்' ராகிய அனாதைகள், வறியவர்கள், கைவிடப்பட்டோர், யாருமேயற்றவர்கள், நோயுற்றவர்கள், தனிமைச் சிறையில் தவிப்பவர்கள், கைது காணாமல் போனவர்களால் பரிதவிக்கும் உள்ளங்களுக்கு உதவுவதன் மூலம் இயேசுவின் தாகத்தை இன்று நாம் தணிக்கலாம். அயலவன் பட்டினியிருக்கும் போது எமக்குப் பசித்ததென்றால், அதுவே இயேசுவின் தாகம் தீர்க்கும் ஆரம்பகட்டம்.

**அனாதைகள், வறியவர்கள், கைவிடப்பட்டோர், யாருமேயற்றவர்கள், நோயுற்றவர்கள், தனிமைச் சிறையில் தவிப்பவர்கள், கைது - காணாமல் போனவர்களால் பரிதவிக்கும் உள்ளங்களுக்கு உதவுவதன் மூலம் இயேசுவின் தாகத்தை இன்று நாம் தணிக்கலாம்.**

## எல்லாம் நிறைவேறிற்று

(யோவான். 19 : 30)

யோவான் நற்செய்தியில் இயேசு இறப்பதற்கு முன்சொன்ன இறுதி வார்த்தைகள் இவை. இவ்வார்த்தைகள் இயேசுவின் பணிவாழ்வின் முழுமையைச் சுட்டிக்காட்டுகின்றன. தந்தையின் விருப்பை முற்றுமுழுதாக நிறைவுபடுத்துகிறார். தலைசாய்ந்து ஆவியைக் கையளித்தல் என்பது யோவானுடைய கருத்துப்படி, இயேசுவின் இறுதி மூச்சையல்ல மாறாக, அவரின் ஆவியை, உயிர் மூச்சை உலகிற்குக் கையளிக்கிறார்.

இயேசு உயிர்த்து 40 நாட்களில் பின்னர், அவருடைய விண்ணேற்பின் போது அப்போஸ்தலர்களுக்கு ஆவியானவர் அருளப்பட்டார் எனத் திருத்தூதர் பணியில் படிக்கிறோம். ஆனால், யோவானைப் பொறுத்தவரை உயிர் பிரிகின்ற போதே, ஆவி அன்புச்சீடருக்கும், அன்னைக்கும், அவர்களோடுணைந்தவர்களுக்கும் பொழியப்படுகிறது. இயேசுவின் இந்த ஆவிப்பொழிதல் அவர் மரணத்தின் பலாபலனாக, முதற்கனியாக விளங்குகிறது. இந்த ஆவியே இயேசுவின் அன்புச் சீடரை அவரின் உயிர்கொடுக்கும் உண்மைச் சாட்சிகளாக உலகிற்கு அனுப்பிவைக்கிறது. ஆக, மரணிக்கும் இயேசுவின் முடிவில்லா மூன்று கொடைகள் எவையெனில் அவரின் ஆவி, அன்புச்சீடர், அன்னைமரியா.

ஆம், அவரின் அன்புச்சீடர்கள் இவ்வுலகில் அனாதைகளாக விடப்படவில்லை. அன்னை மரியின் துணையும், ஆவியின் வழிநடத்தலாலும் அவர் பணி தொடரும். எனவே, இயேசுவின் மரணத்தை நினைவுகூருகின்ற நிகழ்வு "பாவம்" என்று பரிதாப்பட்ட அழுகையோடும், புலம்பலோடும் முடிகின்ற ஒரு வழிபாமு அல்ல. இந்நிகழ்வானது இயேசுவின் அன்புச் சீடராகிய எம் அனைவரையும் உறுதிப்படுத்துகின்ற அவர் வழியில் எம்மை அர்ப்பணிக்கின்ற அவரன்பில் எம்மை ஆழப்படுத்துகின்ற அருள்தரும் நேரமாக அவ்வேளை மாறவேண்டும். எனவேதான், இயேசுவின் மரணம் உயிரளிக்கும், வாழ்வுகொடுக்கும் நிகழ்வாக எம்மை வழிநடாத்த வேண்டும்.

**இந்நிகழ்வானது இயேசுவின் அன்புச் சீடராகிய எம் அனைவரையும் உறுதிப்படுத்துகின்ற, அவர் வழியில் எம்மை அர்ப்பணிக்கின்ற, அவரன்பில் எம்மை ஆழப்படுத்துகின்ற அருள்தரும் நேரமாக அவ்வேளை மாறவேண்டும். எனவேதான், இயேசுவின் மரணம் உயிரளிக்கும், வாழ்வுகொடுக்கும் நிகழ்வாக எம்மை வழிநடாத்த வேண்டும்.**

அருட்திரு. செ. அன்புராஜ், அ.ம.தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொட்டாஞ்சேனை திருக்குடும்ப துணை அங்கத்தவர்கள் சபை

அன்று கார்த்திகைத் திங்கள் 14ம் நாள் கொட்டாஞ்சேனை புதுச்செட்டித் தெரு வியாகுல மாதா ஆலயப் பங்கில் திருக்குடும்ப துணை அங்கத்தவர்கள் சபையின் ஓர் விழுது வேரூன்றிய நன்நாள்.

மாகாணத்தலைவி அருட்செல்வி சோபியா அவர்களின் ஆசியுடனும், பங்குத் தந்தை அருட்திரு.ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே அவர்களின் அனுமதியுடனும் திரு மோகன் பிறிற்றோ அவர்களின் இல்லத்தில் இச்சபை ஆரம்பமாகியது. ஞாயிறு மாலை 4.30 மணியளவில் ஊக்குவிப்பாளர் அருட்செல்வி பிறிசில்லா அவர்களின் வழிநடத்துதலில் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையில் 20 அங்கத்தினர் சமூகமளித்திருந்தனர்.

ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை அடியொற்றி வாழ அழைக்கப்பட்டது எம் சபை என்பதை ஓர் இல்லத்தில் கூடியதும் செபித்ததும் கலந்துரையாடியதுமாகிய நிகழ்வுகளினால் ஏற்பட்ட உணர்வு எம் நினைவுக்கு கொண்டுவந்தது. மேற்படி கூட்டத்திற்கு அருட்செல்வி. மிரியம், ஒலிவியா அவர்களும் வெள்ளவத்தை திருக்குடும்ப சபைத் தலைவி திருமதி பூபதி சூசை மரியதாசன், உபதலைவி திருமதி பவளம் மார்சலின், செயலாளர் றெஜீனா மரியநாயகம், திருமதி ராணி யோண் சமூகமளித்திருந்தனர்.

அருட்செல்வி பிறிசில்லா அவர்கள் திருக்குடும்ப துணை அங்கத்தவர்கள் சபையைப்பற்றி விளங்கப்படுத்தினார்.

பின்பு சபை நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது. தலைவியாக திருமதி பூபதி சூசை மரியதாசன் அவர்களும் செயலாளராக திரு றூபன் கோமஸ் அவர்களும் பொருளாளராக திரு மோகன் பிறிற்ரோ அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள் சகோதரி றெஜினா மரியநாயகம் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

# யூபிலி ஆண்டின் பலன்கள்

### (ஆயர் வியான்னி பெர்னாண்டோ எழுதிய கட்டுரையைத் தழுவியது)

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 2000 யூபிலி ஆண்டின் பலன்களை விசுவாசிகள் அனைவரும் அடைந்துகொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

திருச்சட்டத்தில் பலன் என்பது ஏற்கனவே மன்னிக்கப்பட்ட பாவங்களுக்கான அநித்திய தண்டனை குறைக்க அல்லது தவிர்க்கப்படுவதாகும். இதனை சுத்த கருத்துடையை ஒரு கத்தோலிக்கர் திருச்சபையின் உதவியுடன் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் அடைந்து கொள்ளலாம். ஆகவே பாவமன்னிப்பு அளிப்பதன் மூலம் இப்பலனானது இறைதந்தையின் அன்பை வெளிப்படுத்துகின்றது. இப்பாவமன்னிப்பு இறைவனோடும் அயலவரோடும் முழுமையாக ஐக்கியமாய் இருப்பதற்குத் தடையாகவுள்ள அனைத்தையும் நீக்குகின்றது.

பாவங்களை மன்னிப்பதற்கு கிறிஸ்துவிடமிருந்து அதிகாரம் பெற்ற திருச்சபையின் மூலம் இறைவன் "பலன்கள்" என்னும் அரிய கொடையை எமக்களித்துள்ளார்.

2000 யூபிலி ஆண்டிற்கான பலன் இறைவனோடு தமது உறவைப் புதுப்பித்துக்கொள்ள வழிசெய்கிறது. பாவத்திலிருந்து முற்றாக விடுதலை பெற்று ஒரு புதுவாழ்வைத் தொடங்குவது சாத்தியமாகிறது.

இறைவனை நோக்கி எந்த அளவுக்கு எமது மனந்திரும்புதல் உள்ளதோ அந்த அளவுக்குத்தான் திருச்சபை அளிக்கும் பலன்களும் நன்மை பயக்கும் என்பதை மறக்கலாகாது. மனந்திரும்புதல் முழுமையாக இல்லாவிடின் அது கிறிஸ்துவோடும், திருச்சபையோடும் ஐக்கியமாவதற்குத் தடையாக இருக்கும்.

யூபிலியின் உச்சநிலை என்னவென்றால் திருவருட்சாதனங்களின் மூலம் திருச்சபையில் பிரசன்னமாயிருக்கும் கிறிஸ்துவின் வழியாக இறைத்தந்தையை சந்திப்பதாகும். ஆகவே யூபிலி யாத்திரையின் ஆரம்பமும் முடிவுமாக இருப்பது பச்சாத்தாபம், தேவநற்கருணை என்னும் திருவருட் சாதனங்களே.

## யூபிலிப் பலன் பெறுவதற்கான நிபந்தனைகள்

பின்வரும் ஒழுங்குகளுக்கமைய விசுவாசிகள் அனைவரும் தக்க ஆயத்தத்துடன் யூபிலி ஆண்டு முழுவதும் இப்பலன்களை பெற்றுக்கொள்ளலாம்.

✠ பச்சாத்தாப திருவருட்சாதனத்தை தகுந்தவிதமாக பெற்றுக்கொண்ட பின் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு பரிபூரண பலனை பெற்றுக்கொள்ளலாம். மீண்டும் பாவசங்கீர்த்தனம் செய்யாமலே நாளாந்தம் இப்பலனை அடையலாம். ஆயினும் மனமாற்றத்தில் வளரவும் உளத்தூய்மை பெறவும் அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்வதே சிறந்தது.

✠ சகலவிதமான பலன்களுக்கும் அவசியமாய் இருப்பதுபோல இதற்கும் குறிப்பிடப்பட்ட நற்செயல்களை நிறைவேற்றுமுன் நற்கருணைப் பந்தியில் பங்கு பெறவேண்டும்.

✠ திருச்சபையுடனான ஐக்கியத்துக்குச் சான்றாக திருத்தந்தையின் கருத்துக்களுக்காகச் செபிப்பதுடன் பின்தரப்படும் பிறரன்பு, பச்சாத்தாபச் செயல்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

## வழிபாடுகள், தவச்செயல்கள், பிறரன்புச் செயல்கள்

✠ மறைமாவட்ட ஆயரால் குறிப்பிடப்பட்ட ஓர் ஆலயத்துக்கு திருயாத்திரைசெய்து அங்கு பக்தியுடன் திருப்பலியிலோ, திருப்புகழ் மாலையிலோ, சிலுவைப்பாதை, செபமாலை, திருமணித்தியாலம் போன்ற பக்தி முயற்சிகளிலோ பங்குபற்றுதல்.

தனித்தோ குழுவாகவோ குறிப்பிட்ட ஆலயங்களைத் தரிசித்து நற்கருணை ஆராதனையோ தியானமோ செய்யலாம். இறுதியில் பரலோக மந்திரம், விசுவாசமந்திரம், தேவதாய்க்கு ஒரு செபம் இடம்பெறவேண்டும்.

✠ துயருறும் சகோதரரைச் சந்தித்தல். (நோயாளிகள், சிறைப்பட்டோர், தனித்து வாழும் வயோதிபர், அங்கவீனர், இனக்கலவரம் அல்லது குற்றச் செயல்களுக்கு ஆளானோர்)

இதைச்செய்யும் போது அவர்களில் பிரசன்னமாய் இருக்கும் கிறிஸ்துவை சந்திக்க யாத்திரை செய்யும் மனப்பாங்குடன் செல்லவேண்டும். பலன்களை அடைவதற்குரிய ஏனைய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டு இறுதியில் பரலோக மந்திரம், விசுவாச மந்திரம், தேவதாயாருக்கு ஒரு செபம் இடம்பெற வேண்டும்.

✠ தவ மனப்பாங்கை வெளிப்படுத்தக்கூடிய நற்செயல்களாலும் பரிபூரண பலனை அடைந்து கொள்ளலாம்.
உ-ம் : நாள் முழுவதும் புகைத்தல் அல்லது குடியைத் தவிர்த்தல், ஒரு சந்தி உபவாசம் அல்லது மாமிசத் தவிர்ப்பு.

இதன்மூலம் மீதப்படுத்தும் பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்தல், மதப்பணி அல்லது சமூகப் பணிக்காக (உ-ம் : அனாதைப் பிள்ளைகள், வறிய முதியோர், அகதிமுகாமில் உள்ளோர்) நியாயமான பங்களிப்புச் செய்தல், பிறர்நலப் பணிக்காக தமது ஓய்வு நேரத்தைச் செலவிடுதல் அல்லது இது போன்ற வேறு தவச்செயல்களைச் செய்யலாம்.

✠ நோயாளர் அல்லது தமது இருப்பிடத்திலிருந்து வெளியேற முடியாதவர்களுக்காக ஆன்ம குருக்கள் இந்த நிபந்தனைகளில் மாற்றங்கள் செய்யலாம்.

பரிபூரண பலனை ஒரு நாளுக்கு ஒருமுறை மட்டுமே அடைந்து கொள்ள முடியும். இது குறிப்பிட்ட செயலை நிறைவேற்றுபவருக்கே திருச்சபையால் அளிக்கப்படுகிறதென்றாலும் அதை அவர் உயிர்வாழும் அல்லது இறந்த ஒருவருக்கு அளிக்கலாம். இது உயர்ந்த பிறரன்புச் செயலாயிருப்பதுடன் விசுவாசிகளின் ஐக்கியத்திற்கும் சான்றுபகரும்.

எனவே விசுவாசிகள் அனைவரும் யூபிலி ஆண்டிற்காகத் திருச்சபை அளிக்கும் விசேட பலன்களை ஏராளமாகப் பெற்றுக்கொள்ள முன்வருவார்களாக.

## பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரியவே

**அருட்தந்தை G. அருள்நேசன்**

2000 யூபிலி ஆண்டினிலே உரும்பிராய் பங்கின் புதிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் புதிய ஆலய மேய்ப்புப்பணிச்சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுடைய பணியேற்பின்போது அவர்களுடைய நல்ல கருத்துக்களுக்காக விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத் திருப்பலி மறையுரையின் போதே பங்குத்தந்தையவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்கையில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் மண்வந்த இறைமகன் இயேசு தமது பகிரங்கப் பணியை ஆரம்பிப்பதற்கு முன் ஆயத்தமாக தூய ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டு திருமுழுக்குப் பெற்றதை நினைவுகூரும் இந்நாளிலே திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் முப்பணிகளின் மட்டில் உங்களுக்குள்ள கடமையினை ஒரு முறை மீட்டிப் பார்ப்பது சிறந்தது. அந்தவகையிலே விசேடமாக மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கும் புதிய உறுப்பினர்களாகிய உங்களிடம் பங்கின் வளர்ச்சிக்காக அதன் ஒருங்கிணைந்த செயற்பாட்டிற்காக உழைக்கும் மாபெரும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருக்கிறது. எனவே மக்களின் இவ் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டியது உங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை. அத்தோடு ஆலய மேய்ப்புப்பணிச் சபையினர் என்ற ரீதியில் ஆலயத்தோடு மட்டும் நின்றுவிடாது சற்று அப்பால் சென்று பரந்த மனத்துடன் செயற்படும்படியும் தனிப்பட்ட பெயருக்கும் புகழுக்கும் இடம் கொடாது இப்பணியிலே வரும் சவால்களை எதிர்கொண்டு முன்னையவர்கள் செயற்பட்டது போன்று வெகு சிறப்பாக செயற்படும்படியும் கூறி, பங்கின் வள்ர்ச்சியிலே ஒத்துழைத்த முன்னைநாள் உறுப்பினர்களுக்கும், அனைத்துப் பங்கு மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

J. றொசான்
உரும்பிராய் நிருபர்.

## "பணி அரும்புகள்" பிழை திருத்தம்

சென்ற இதழில் "பணி அரும்புகள்" என்ற போட்டித் தொடரில் வெளியான சில தகவல்கள் தவறானவை:

1. றொங்கல்லி என்பது 23ஆம் அருளப்பருடைய குடும்பப் பெயர் என்பதே சரியானது. பெற்றோர் இட்ட பெயர் அஞ்சலோ.

2. 23ஆம் அருளப்பர் சின்னப்பர் என்பது தவறானது 23ஆம் அருளப்பர் என்பதே சரியானது. அவர் 1881ஆம் ஆண்டு நவம்பர் 25இல் பிறந்தார் என்பதே சரியானது.

தவறுகளுக்கு
வருந்துகிறோம்.

## தன்னைப்பற்றிய உண்மைகளை சமூகத்தில் துணிவுடன் கூறுவது ஒரு தலைவனுக்குரிய பண்பாகும்

இளவாலை புனித யாகப்பர் ஆலய இளைஞர் யுவதிகளுக்கு ஒரு நாள் தலைமைத்துவ உளவியல் கருத்தரங்கு 20.01.2000 வியாழனன்று இளவாலை பங்குத்தந்தை அருள் திரு. அன்ரனி பாலா அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கருத்தரங்கினை அருள்திரு எட்வின் வசந்தராஜா (அ.ம.தி) அவர்கள் தமது கருத்துரையில் மேற்படி கருத்தினை முன்வைத்து நெறிப்படுத்தினார். மேலும் அவர் தமது கருத்துரையில் இன்று இளைய தலைமுறையினர் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள், புதுப்பித்தல் தன்மைகளுக்கு தம்மை எவ்வாறு தயார் செய்ய வேண்டும் என்பதையும் அத்துடன் தமது ஆற்றலையும், தலைமைத்துவத்தினையும் எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தினார். அத்துடன் இளைஞர் யுவதிகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு உளவியல், தலைமைத்துவ பயிற்சிகள் அளிக்கப்பட்டன. குழு ஆய்வின் நிறைவில் ஒவ்வொரு குழுக்களும் தாம் தேர்ந்த விடயத்தின் மூலம் வெளிப்படும் தலைமைத்துவப் பண்பினை சிறிய நாடகங்களாக முன்வைத்தனர். ஏறக்குறைய் இக்கருத்தரங்கில் நாற்பத்தைந்து இளைஞர் யுவதிகள் பங்குபற்றி பயன் பெற்றனர். இக்கருத்தரங்கிற்கு உதவியாக அருள்சகோ. ஞானேந்திரன் அவர்களும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

தகவல்
சு. கா. சுகந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றிப்பு வழிபாட்டில் . . .

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய யூத சமயத்திலும் கொள்கை சார்ந்த பிரிவினைகள் இருந்தன. சமாரியருக்கும் யூதருக்குமிருந்த பிரிவினை இத்தகையதே. ஆனால் இயேசுவோ சமாதானத்தின் பொருட்டு இந்த சமுதாய விதிகளை உடைக்க அஞ்சவில்லை. சமாரியரின் ஊர் வழியாகப் பயணம் செய்தார். சமாரியப் பெண்ணோடு உரையாடினார். எங்கே தொழுவது என்பது முக்கயமல்ல, உண்மையிலும் ஆவியிலும் அவரைத் தொழ வேண்டும் என்று கூறினார். தாம் பாடுட்டும் வேளை அண்மித்தபோது தமது சீடர்களின் ஒற்றுமைக்காக செபிக்கிறார். தமது சீடர்களிடையேயும், பிற்காலத்தில் தம்மைப் பின்பற்றுவோரிடையேயும் ஏற்படப்போகும் பிரிவினைகளை அவர் அறிந்திருந்தார். எனவேதான் தாமும் தந்தையும் ஒன்றித்திருப்பது போல அவர்களும் அன்பில் ஒன்றித்திருக்க வேண்டுமென்று உருக்கமாகச் செபிக்கிறார்.

"யாழ்ப்பாணத்தில் வாழும் நீங்கள் அகில இலங்கைக்கும் வழிகாட்டிகளாக இருக்கமுடியும். கிறிஸ்துவில் ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள். ஒருநாள் ஒன்றிப்பு வரும்" என்று கூறினார்.

திருத்தூதர் பணியினூடாக ஒன்றிப்பு என்னும் விடயம் பற்றி உரையாற்றிய யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் "கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்தமட்டில் இது ஒரு புதுமையான காரியம். 2ம் வத்திக்கான் சங்கத்துக்குமுன் ஒன்றிப்புப்பற்றி பேசப்படவில்லை. எங்கள் திருச்சபைதான் ஒரே உண்மையான திருச்சபை என்று கருதி பிற சபைகளோடு உறவுகளைத் தவிர்த்துவந்தது. 2ம் வத்திக்கான் சங்கம் இந்த நிலையை மாற்றி புதிய சிந்தனைகளைக் கொடுத்தது. மறைபோதக நாடுகளில் பிளவுபட்ட கிறிஸ்தவம் ஒரு துர்மாதிரியாக இருந்தமையால் கிறிஸ்தவ ஒன்றிப்பின் அவசியம் உணரப்பட்டது. இதர சபைகளோடு சேர்ந்து செயலாற்ற திருத்தந்தை 23ம் அருளப்பரால் 'கிறிஸ்தவ ஒன்றிப்புக்கா[illegible] செயலகம்' தி[illegible]கப்பு[illegible]

திருச்சபை தன்னையே புதுப்பித்து, மற்றவர்களுடைய வழிபாடுகள், கொள்கைகள், ஆன்மீக செல்வங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து விசுவாசம், படிப்பினை ஆகியவற்றை தெளிவுசெய்து கொள்வதும், வாழ்க்கையில் பிற சபைகளுடன் உரையாடலை மேற்கொண்டு பணிகளில் ஒன்றித்து செயலாற்றுவதும் எமது பிழைகளை ஏற்றுக் கொள்வதும் ஒன்றிப்புக்கு அவசியமானவை. ஆதித்திருச்சபை முன்மாதிரியான ஒரு சமூகமாக இருந்தாலும் அங்கும் பல பிரிவினைகள் மறைபரப்புப் பணிக்கு தொல்லை கொடுத்தன. ஆயினும் சீடர் உயிர்த்த ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்டு தூயஆவியால் வழிநடத்தப்பட்டனர். இதனால் அவர்கள் அப்பிரிவினைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது" என்று கூறினார்.

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் பேரருட்திரு S. ஜெபநேசன் 'திருமுகங்களினூடாக ஒன்றிப்பு' என்னும் விடயம் பற்றிப் பேசுகையில் புனித பவுல் கொரிந்தியருக்கும், எபேசியருக்கும் எழுதிய திருமுகங்களை ஆதாரமாகக் கொண்டு அக்காலத்திலும் ஆட்களைக் கொண்டும் கொள்கை அடிப்படையிலும் பிரிவுகள் இருந்தமையையும் இப்பிரிவுகள் பவுலை வாட்டியதையும் எடுத்துக் காட்டினார்.

"ஒன்றிப்பின் செயற்பாட்டுக்கு கடவுளின் ஆவி அவசியம். கிறிஸ்துவுக்குள் ஒருவன் வரும்போது அவன் ஒரு புது சிருஷ்டி ஆகிறான். பிரிவினை கடவுளுக்கு எதிரான பாவம்" என்று அவர் மேலும் கூறினார்.

இவ்வழிபாட்டுக்கான செபங்களையும் பாடல்களையும் மெதடிஸ்த சபை, இரட்சணிய சேனை உட்பட அனைத்து சபைகளும் ஒழுங்கு செய்திருந்தன. ஆயர்கள், குருக்கள், கன்னியர்களும் உயர்தர வகுப்பு பாடசாலை மாணவரும் பொதுமக்களுமாக பெருந்தொகையான மக்கள் இவ்வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

## துறவற அர்ப்பண 25வது யூபிலி நிறைவு



### அருட்சகோதரி மேரி யோண் சேவியர் H.C.

திருச்சிலுவைக் கன்னியர் சபையில் இணைந்து கடந்த 25 ஆண்டுகள் இறைவனுக்கும் மக்களுக்கும் அரும்பணி ஆற்றிவரும் எம் சகோதரி அருட்செல்வி. மேரி யோண் சேவியர் அவர்களை அன்போடு வாழ்த்துகிறோம். மேலும் பல்லாண்டுகள் இவர் இறையாசீர் பெற்று உடல் உள ஆன்மீக வளங்களோடு நற்பணிபுரிய இறையருளை வேண்டுகிறோம்.

அன்போடு இவரை வாழ்த்தும்
சகோதரன் அருட்திரு. பேணாட் றெக்னோ
சகோதரி அருட்செல்வி. கெனற் யோண் சேவியர் H.C.
சகோதரர், சகோதரிகள்.

## அம்மாவின் ஓராண்டு நினைவலைகள்

ஆண்டவருக்குள் இறப்பவர் பேறுபெற்றோர்

அன்னையுடன்
17
05
1917



ஆண்டவருடன்
25
03
1999

### திருமதி அன்னமுத்து அன்னம்மா ஜோர்ச்

அம்மா ஓராண்டு என்ன
ஓராயிரம் அண்டுதான் வந்தபோதும்
உங்களின் இனிய நினைவுகள்
எம் நெஞ்சை விட்டகலாதம்மா
அம்மா எங்கள் ஆருயிரே
உங்கள் பிரிவினால் எம்மவர்
ஈரவிழிகள் என்றும் காயாதம்மா

இரக்கமுள்ள இறைவா உமது அடியாளான எம் அம்மாவிற்கு உமது தெய்வீக வீட்டில் வாழ வரமருள வேண்டி நிற்கிறோம். இவரின் ஆத்ம சாந்திக்காக யாழ் மரியன்னை பேராலயத்தில் 25-03-2000அன்று காலை 6.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

'மலரகம்'
12/3 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

## யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் எழுச்சிக் கருத்தரங்கு

பொதுநிலையினரின் காலம் மலர்ந்து விட்டது. இது அவர்களின் பொற்காலம் என்றவாறு அகில திருச்சபையிலும் மிகப் பரவலாகப் பேசப்பட்டுவருகிறது.

ஆனால் யாழ் திருச்சபையில் பொதுநிலையினரின் மிகமோசமான நிலை புதிதாக அமைக்கப்பட்ட பொதுநிலையிர் ஆணைக்குழுவுக்கு ஒரு சவாலாக இருக்கிறது. இதனை மேற்கொள்ளத் துணிந்த ஆணைக் குழுத் தலைவர் அருள்திரு சகாயநாயகம் அடிகளார் குழுவைக்கூட்டி வழிவகைகளை ஆராய்ந்து திட்டங்களைத் தீட்டினார். அவற்றில் முதலாவதாக ஒரு எழுச்சிக் கருத்தரங்கு யாழ் மறைக்கல்வி நிலையத்தில் அண்மையில் நடாத்தப்பட்டது. இதில் மறைமாவட்டத்தின் அதிகமான பங்குகளிலிருந்து 52 பேர் பங்குபற்றினர்.

அருட்செல்வி மேர்சியின் செபவழிபாட்டுடன் தொடங்கிய அமர்வில் ஆணைக் குழுத்தலைவர் தமது தலைமை உரையில் பொதுநிலையினர் திருச்சபையில் சகல உரிமைகளையும் கடமைகளையும் கொண்டுள்ள உறுப்பினர். என்றும், அவர்களின் பங்களிப்பு யாழ் திருச்சபைக்கு மிகவும் இன்றியமையாததாய் இருக்கிறது என்றும், அவர்கள் தம் உறக்க நிலையிலிருந்து விடுபட்டு புத்துணர்வுடன் தம்மைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கருத்துரைகள் பொதுநிலையினரின் அழைப்பு, பொதுநிலையினரின் பணிகள், பொதுநிலையினர்-திருநிலையினர் உறவு என்ற தலைப்புக்களில் திரு. A.S. அகஸ்ரின், அருள்திரு இர்விச்சந்திரன், அருள்திரு யேசுரட்ணம் என்பவர்களால் முன்னெடுக்கப்பட்டன. கருத்துரைகளின் உட்பொருளை விளக்க அருட்தந்தையர்கள் எடுத்தாண்ட நாடக உத்திமுறைகள் மிகவும் கச்சிதமாக அமைந்தன.

குழு ஆய்வுகளின்போது பொதுநிலையினரின் அசமந்தப்போக்கு, பங்குத்தளங்களில் அவர்களின் செயற்பாடுகளுக்குள்ள தடைகள் அவற்றை மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் என்பன அலசி ஆராயப்பட்டன. தத்தம் சாட்சிய வாழ்வால் கிறிஸ்துவை உலகுக்குக் கொடுக்கும் சாரம் அமைந்த கருத்துக்கள் குழுக்களால் முன்வைக்கப்பட்டன. இவை அவர்கள் திருச்சபையின் வளர்ச்சியில் கொண்டுள்ள ஆர்வத்தினையும், தாகத்தினையும் காட்டுபவையாக அமைந்திருந்தன. பொது அமர்வின்போது சகலரும் ஏகோபித்த குரலில் தாம் பெற்றுக்கொண்ட உணர்வுகளுக்குத் தமது நன்றிப் பெருக்கை வெளிப்படுத்தி இத்தகைய கருத்தரங்குகள் மறைக்கோட்டங்களில் நடைபெறவும், விவிலிய வகுப்புக்கள் நடாத்தவும் வழிசெய்யப்படவேண்டும் என்றும் கேட்டுநின்றனர்.

திரு. சூசைநாதர்

## 2ஆம் ஆண்டு நினைவு





| திருமதி நேசமணி பெஞ்சமின் | | செல்வி எலிசபெத் பெஞ்சமின் | |
|---|---|---|---|
| பிறப்பு | இறப்பு | பிறப்பு | இறப்பு |
| 09.09.1926 | 14.03.1997 | 10.11.1947 | 28.07.1953 |

கருணையின் தேவனே! இவர்கள்மேல் இரக்கம் கொண்டு இவர்களுடைய பாவங்களை மன்னித்து நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

ஆன்ம சாந்தித் திருப்பலி 14.03.2000 செவ்வாய் காலை 6.30 மணிக்கு (பு. நே.) யாழ் பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

அந்தோனியார் கோயில் வளவு,
நீர்வேலி தெற்கு.

பிரிவால் துயருறும்,
அ. இ. பெஞ்சமின்
மற்றும் உறவினர்கள்

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு



### சூசைப்பிள்ளை திருச்சிலுவை (அருளானந்தம்)

மலர்வு
14.09.1942

உதிர்வு
17.02.2000

"சீவியத்தில் நேசித்தோரே மரணத்திலும் என்னை மறவாதீர்"

அன்னாரது ஆத்ம சாந்திக்காக அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலயத்திலும் நீர்கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி 18-03-2000 சனிக்கிழமை ஒப்புக்கொடுக்கப்படுமென்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

2ம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

என்றும் மறவாத,
மனைவி சந்திரா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிப்பு வழிபாட்டில் முதல்தடவையாக மூன்று ஆயர்கள்

# இறைவன் தமக்குரிய காலத்தில் ஒன்றிப்பை அருளுவார்

## அங்கிலிக்கன் திருச்சபை – ஆயர் கெனத் பெர்னாண்டோ

ஒன்றிப்பு வழிபாட்டில் இவ்வளவு பெருந்தொகையான மக்கள் சமூகமளித்துள்ளதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். யாழ் மக்கள் ஒன்றிப்பில் எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பதை இது காட்டுகின்றது. நாம் அனைவரும் இக்கருத்துக்காக தொடர்ந்து செபித்து அதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றோம். இறைவன் தமக்குரிய காலத்தில் ஒன்றிப்பை அருளுவார்".

இவ்வாறு பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில் பெப்ரவரி 29ஆம் திகதி நடந்த ஒன்றிப்பு வழிபாட்டின்போது உரைநிகழ்த்திய அங்கிலிக்கன் ஆயர் பேரருள்திரு கெனத் பெர்னாண்டோ கூறினார்.

யாழ் கத்தோலிக்க ஒன்றிப்பு ஆணைக்குழுவும் யாழ் கிறிஸ்தவ ஒன்றியமும் இவ்வழிபாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

ஆயர் கெனத் பெர்னாண்டோ மேலும் பேசுகையில் நாம் நீண்டகாலமாக பிரிந்து வாழ்ந்தபடியால் ஒன்றிப்பு கடினமாக இருக்கிறது என்றும், நாம் படிப்படியாகச் செல்லவேண்டுமென்றும், ஒன்றித்து உழைக்கவேண்டுமென்றும் கூறினார். மேலும் அவர் "திருத்தந்தை 1998இல் ஆசிய ஆயர்களுக்கான கூட்டத்தின்பின் வெளியிட்ட "ஆசியாவில் திருச்சபை" (Eclesia in Asia) என்னும் நூல் மிக முக்கியமானது. அதை நாம் குழுக்களாக ஆய்வுசெய்ய வேண்டும். இங்கிலாந்தில் 1998இல் நடந்த அங்கிலிக்கன் திருச்சபையின் கூட்டமும் ஒன்றிப்பின் பாதையில் மிக முக்கியமானது" எனக் குறிப்பிட்டார்.

நற்செய்தி நூல்களினூடாக ஒன்றிப்பு பற்றி பேசுகையில் யேசுவினுடைய காலத்தில் அமைப்புப்பெற்ற திருச்சபை இருக்கவில்லை.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## திருத்தந்தை புனித பூமிக்கு

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் மார்ச் மாதத்தில் புனித பூமிக்கு யாத்திரை மேற்கொள்ளும்போது இளைஞர்களுக்காக இயேசு அருட்பேறுகள் போதித்த மலையின்மீது திருப்பலி ஒப்புக்கொடுப்பார். இந்நிகழ்ச்சியில் சுமார் 45,000 இளைஞர் கலந்துகொள்வார்கள் என இஸ்ராயேல் உல்லாசப் பிரயாண அமைச்சிலிருந்து வெளியான செய்தியிலிருந்து தெரியவருகின்றது.

மார்ச் 20-21ல் தமது பயணத்தின் முதற்கட்டமாக அவர் ஜோர்தானுக்கு வருகைதந்து ஜெருசலேமில் இரவு தங்குவார். இஸ்ராயேலிலும் பாலஸ்தீனப் பிரதேசத்திலுமுள்ள புனித தலங்களைத் தரிசிப்பதுடன் இஸ்ராயேல் பிரதமர் ஏகுட் பராக், மேயின் லாவு ஆகியோரைச் சந்திப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பெத்லகேமில் திருத்தந்தை ஒப்புக்கொடுக்கும் வெளியரங்கத் திருப்பலியில் பாலஸ்தீனத் தலைவர் யாசர் அரபாத் கலந்துகொள்வார். நகருக்கு அண்மையிலுள்ள ஓர் அகதி முகாமையும் திருத்தந்தை தரிசிப்பார். 'பலஸ்தீன மக்கள் மட்டிலும் அவர்களது பிரச்சனைகள், சுயநிர்ணய உரிமைகள் மட்டிலும், உண்மையான கரிசனை காட்டிய ஓர் அரிய தலைவர்' என திருத்தந்தையை வர்ணித்த பெத்லகேம் நகரமேயர் ஹனா நாசர் தீவிரவாத முஸ்லிம்களிடமிருந்து அச்சுறுத்தல்கள் வந்துள்ள போதிலும் சகலவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று கூறினார்.

## திருக்குடும்ப திருக்காட்சி விழா

திருக்குடும்ப சபைக்கு மாசித்திங்கள் 3ம் நாள் என்பது நினைவு கூரப்பட வேண்டிய முக்கியமான தொன்றாகும். 1822ஆம் ஆண்டு மாசிமாதம் மூன்றாம் நாள் அப்ப நடுவில் இறைவன் தம்மை வெளிப்படுத்தி திருக்காட்சி தந்த இந்நாளானது இறை ஆசீர் நிரம்ப அங்கீகாரம் பெற்ற ஒரு நாளாகும். உலகமெங்கும் உள்ள எமது சபைகள் யாவும் இந்நாளைக் கொண்டாடும் முகமாக திரிதின ஆராதனைகள் நடத்துவர்.

இப்புத்தாயிரம் ஆண்டில் கொழும்பில் உள்ள தமிழ் பொதுநிலையினர் ஒன்றுசேர்ந்து கொட்டாஞ்சேனை புதுச்செட்டித்தெரு வியாகுல மாதா ஆலயத்தில் விழாவெடுத்தனர். இப்பங்கைச் சேர்ந்த துணை அங்கத்தவர் நடாத்திய இவ்விழாவில் மாகாணத்தலைவி அருட்சகோதரி சொபியா ஏனைய அருட்சகோதரிகள் வெள்ளவத்தை தமிழ்த் துணை அங்கத்தவர்கள் கொட்டாஞ்சேனை ஏனைய சபைப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ர்கள் திருப்பலி ஒப்புக் கொடுத்தார். திருப்பலியின் பின் ஒன்றுகூடல் இடம் பெற்றது. குழுத்தலைவியின் வரவேற்புரையின் பின்னர் மாகாணத்தலைவி சோபியா அவர்கள் உரையாற்றினார். அவர் தமது உரையில் எமது சபை நிறுவனர் பிரான்சில் உள்ள போர்டேவில் திருக்குடும்பத்தை முன் மாதிரிகையாகக் கொண்டு ஆரம்பித்த இச்சபையானது ஆதிக் கிறிஸ்தவர்களின்

மாசி 3ம் நாள் பி.ப. 4.00 மணிக்கு அருட்தந்தை றூபன் மரியாம்பிள்ளை அவ உணர்வுகளையும் நற்பண்புகளையும் அடிப்படையாகக் கொண்டது. துறவறக் கன்னியர், தியானயோக துறவியர், உலகுசார் சபையினர், பொதுநிலையினர் ஆகிய நான்கு பிரிவுகளை உள்ளடக்கிய எமது சபையின் பொதுச் சங்கத்தில் ஆலோசிக்கப்பட்ட முக்கிய விடயங்களைப் பாதுகாப்பதில் ஏற்படும் சவால்கள் என்பன பற்றி விளக்கினார்.

பிளசம் பிரான்சிஸ்

## இவ்வாண்டின் மாமனிதராக திருத்தந்தை

ருமேனியாவின் தேசிய வானொலி நிலையமான 'புகாறெஸ்ட் வானொலி' திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரை இவ்வாண்டின் மாமனிதராகத் தேர்ந்தெடுத்துள்ளது. உலக அமைதிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பையும், தம் நாட்டிற்கு அவர் வருகை தந்ததையும் கருத்தில் கொண்டு 'புகாறெஸ்ட் வானொலி' அவருக்கு அவ்விருதை வழங்கியுள்ளது.

திருத்தந்தையின் முகமும் புகாறெஸ்ட் வானொலி நிலையமும் இருபக்கத்திலும் பொறிக்கப்பட்ட மெருகூட்டிய வெள்ளிப் பதக்கத்தையும் சான்றிதழையும் பேராயர் ஜியான் கிளோட் பெரிசெற் திருத்தந்தையின் சார்பாகப் பெற்றுக்கொண்டார்.

ஜனநாயகத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் ஓயாது பாடுபட்டு உலக மக்களிடையே சமாதானத்தையும் புரிந்துணர்வையும் வளர்த்தமைக்காகவும் ஓதொடொக்ஸ் சபையினர் பெரும்பான்மையாக வசிக்கும் ருமேனியாவை தரிசிக்க முன் வந்ததாலும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக அவர் தொடர்ந்து எடுத்துவரும் முயற்சிகளுக்காகவும் இவ்விருது அவருக்கு வழங்கப்படுவதாக சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அடைக்கல அன்னை ஆலயத்தில் திருச்சிலுவைப் பாதை திருநிலைகள்

"யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில், வியாகுல அன்னையின் பக்தி முயற்சியினை மீண்டும் கட்டியெழுப்பும் முகமாகவும் இக்கல்வாரிப் பாடுகளின் பயணத்தின் ஊடாக தமது வாழ்வினை சீர்படுத்தவும் பகிரங்கச் சிலுவைப் பாதை பக்தி முயற்சி மிகவும் துணையாக அமையும் என்பதில் ஐயமில்லை".

"நாம் இறைவனின் பிள்ளைகளாய் இருக்கும் தகுதியினைப் பெற்றுக்கொள்ள எமது வாழ்வினைச் சீர்படுத்தி அதன் மூலம் விசேட வரங்களைப் பெற இம்முயற்சி பயனுள்ளதாக அமையும்".



இவ்வாறு அண்மையில் ஆயர் அவர்கள் யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் பகிரங்கச் திருச்சிலுவை பாடுகளின் திருநிலைகளை திறந்து வைக்கும் திருப்பலிப் பூசையின் போது தமது மறையுரையில் குறிப்பிட்டார். ஆயர் அவர்களின் தலைமையில் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரும் இணைந்து கூட்டுத் திருப்பலி சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி நிறைவின் பின்னர் ஆலய மணிக்கோபுரத்தருகே அமைக்கப்பட்ட முதலாம் திருநிலை ஆயர் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

ஜெயவதனி.

## இளையோர் ஆணைக்குழுவின் புதிய தலைவர்

### அருள்திரு சாள்ஸ் கொலின்ஸ்

யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் தலைவராக பாசையூர் பங்குத்தந்தை அருள்திரு சாள்ஸ் கொலின்ஸ் அவர்கள் ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இப் பணியை அகவொளி நிலைய இயக்குனர் அருள்திரு எஸ். ஜே. இராஜநாயகம் ஆற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அருள்தந்தை பிலிப்பின் இரு நூல்கள்

"திருமுழுக்கு நம் வாழ்வு" தூய ஆவிக்குத் துணை வாழ்வு" என்னும் இரு அரிய நூல்கள் அண்மையில் வெளிவந்துள்ளன. அவை திருவுளப் பணியாளர் சபையைச் சேர்ந்த அருள்தந்தை பிலிப் அவர்களால் ஆக்கப்பெற்ற திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனங்களைப் பற்றியவையாகும்.

"திருமுழுக்கு நம் வாழ்வு" என்னும் நூல் திருமுழுக்கின் பல அம்சங்களை விளக்கமாகத் தருகிறது. இஸ்ராயேலரின் திருமுழுக்கில் இருந்து இற்றைவரை அதன் வரலாறு, வளர்ந்தோர் குழந்தைகள் திருமுழுக்கு, திருமுழுக்குத் தரும் வாழ்வு, அதற்கான ஆயத்தங்கள், சடங்குகள் முதலிய விபரங்கள் அடங்கிய 11 அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

"தூய ஆவிக்குத் துணை வாழ்வு" சிறப்பாகத் தூய ஆவியையும் அவருக்கு வாழ்க்கைப்படுவதைப் பற்றியும் கூறுகிறது. மூவொரு கடவுளுக்குள் வாழ்வு, வேதாகமத்தில் ஆதியிலிருந்து செயலாற்றிவரும் தூய ஆவி, ஆவி தரும் வாழ்வு, அவரது கொடைகள், கனிகள், வரங்கள், உறுதிப்பூசுதல் ஆயத்தம் அருட்சாதனச் சடங்கு முதலிய 14 அதிகாரங்களை இந்நூல் கொண்டுள்ளது. தூய ஆவியானவரை அறிந்து, அவருக்கு வாழ்க்கைப்பட்டு திருச்சபையில் பொறுப்புள்ளவராக சாதாரண இயல்பான வாழ்வு வாழ்வது எப்படி என்பதை இந்நூல் எடுத்துக் காட்டுகின்றது.

இவ்விரு நூல்களும் இலகுவான நடையில் தெளிவாக எழுதப்பட்டிருப்பதால் அனைவரும் வாசித்துப் பயனடையக் கூடியவை. விசேடமாக ஆசிரியர்கள், அருட்சாதனங்களுக்கு ஆயத்தம் செய்வோருக்கு சிறந்த கைநூலாகும். வளர்ந்தோருக்கு சிறந்த ஆன்மீக நூலுமாகும்.

பந்திகள் அமைக்கப்பட்டுள்ள விதமும், முக்கிய கருத்துக்கள் தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ளமையும் நூலை இலகுவாகப் படிக்க உதவுகின்றன.

இப்பத்திரிகை யாழ். பிரதான வீதி, 360 இலக்கத்தில் உள்ள புனித வளன் [illegible] முறையில் 2000ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.- P.197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org